## ஆஸ்ரமம் பற்றி


ஆந்திர மாநிலத்தில் நெல்லூரிலிருந்து பதினைந்து கிலோமீட்டர் தொலைவில் உள்ள கொலகமூடியில் பகவான் வெங்கைய ஸ்வாமிகளின் சமாதி கோவில் உள்ளது. தினந்தோறும் நூற்றுக்கணக்கான பேர் அவர் தரிசனத்திற்காகச் செல்கின்றனர். ஒவ்வொரு சனிக்கிழமையும் ஸ்வாமிகளுக்கு தங்கள் நமஸ்காரங்களைத் தெரிவிக்க ஆயிரக்கணக்கானவர்கள் அங்கு குவிகின்றனர். எல்லா யாத்ரிகர்களுக்கும் தினந்தோறும் இரண்டு வேளை உணவு இலவசமாக போடப்படுகின்றது. சனிக்கிழமைகளில் பகல் பனிரண்டு மணி முதல் மாலை நான்கு மணிவரை யாத்ரிகர்களுக்கு உணவு பரிமாறப்படுகின்றது. நெல்லூரிலிருந்து கொலகமூடி செல்ல ஆர்.டி.சி. பஸ் நிலையத்திலிருந்து அடிக்கடி பஸ்கள் புறப்படுகின்றன.

ஸ்வாமிகளின் வாழ்க்கை வரலாறுபற்றி மொத்தம் ஏழு புத்தகங்கள் தெலுங்கில் உள்ளன. தமிழில் வெளியிடப்படும் முதல் நூல் இதுதான். ஸ்வாமிகளுடைய அருளினால் 400 பக்க அளவில் அவர் வரலாற்றைத் தமிழில் வெளியிட எண்ணம் எங்களுக்கு உள்ளது. வள்ளல் தன்மை கொண்ட மக்களின் இதய பூர்வமான ஒத்துழைப்பை நாங்கள் வேண்டி நிற்கின்றோம்.


திரு. P. சுப்பராமையா
பகவான் ஸ்ரீ வெங்கைய ஸ்வாமிகள் ஆஸ்ரமம்
கொலகமூடி - 524321
(சர்வேபள்ளி வழி)
நெல்லூர் மாவட்டம் (ஆந்திர பிரதேசம்)
இந்தியா.


# பகவான் ஸ்ரீ வெங்கைய ஸ்வாமி

(தற்கால மஹான் ஒருவரின் சுருக்கமான வாழ்க்கை ஓவியம்)



**P. சுப்பராமையா**

# பகவான்
# ஸ்ரீ வெங்கைய ஸ்வாமி

(தற்கால மஹான் ஒருவரின் சுருக்கமான வாழ்க்கை ஓவியம்)

*தொகுப்பு :*

**P. சுப்பராமையா**

ஓய்வுபெற்ற ஆசிரியர்
கொலகமூடி - 524321
நெல்லூர் மாவட்டம், ஆந்திர பிரதேசம்

*தமிழாக்கம் :*

**சங்கரநாராயணன் V.**

சென்னை - 600 086.

Published by :
**P. SUBBARAMAIAH**
*Retired Teacher,*
SRI SWAMY KRUPA PUBLICATIONS
GOLAGAMUDI - 524321
NELLORE DISTRICT
ANDHRA PRADESH, INDIA

முதற்பதிப்பு : 1998

All rights reserved by the author

விலை : ரூ. 5.00

அச்சிட்டோர் :
ஸ்ரீ மாருதி லேஸர் பிரிண்டர்ஸ்
174, பீட்டர்ஸ் சாலை,
சென்னை - 600 014.

ஓம்

# சமர்ப்பணம்

என்னை இந்த மனித உடலில் தோற்றுவித்து, எனது சமர்த்த சத்குருநாதருக்கு என்னால் இயன்ற அளவு எளிமையாக சேவை செய்யும் மகத்தான வாய்ப்பை அளித்த பரமாத்மாவுக்கு இந்த நூலை ஆழ்ந்த மரியாதையோடு அர்ப்பணிக்கிறேன்.

மற்றும் அந்தப் பரமாத்மாவின் தோற்றமான எங்கள் குலதெய்வம் ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸ்வாமிக்கும், என் தாய்க்கும், தந்தைக்கும் மற்றும் எனக்குக் கல்லூரிப் படிப்பை அருளி அதன் மூலம் என் வாழ்க்கையை நடத்த கௌரவமிகுந்த ஆசிரியர் தொழிலை அடைவித்த எனது சகோதரருக்கும் கொலகமூடி பகவான் ஸ்ரீ வெங்கைய ஸ்வாமியின் உருவத்திலுள்ள தத்த பகவானின் மஹிமைமிக்க பாதகமலங்களுக்கு என்னைச் செலுத்திய ஆசார்யா ஸ்ரீ எக்கிரால பரத்வாஜா அவர்களின் பாதகமலங்களுக்கும், பகவான் ஸ்ரீ வெங்கைய ஸ்வாமியின் தாமரைத் திருவடிகளுக்குப் பிரார்த்தனையும், பூஜையும் செய்யும்படி எனக்கு வழிகாட்டிய அருள்மிகு சாயிநாதருக்கும், என்னைத் தம் மடியில் இருத்திக் கொண்டு, எனது ஆத்மீக சாதனையின் ஒரு அங்கமாக அவரது மஹிமை மிகுந்த தெய்வீக லீலைகளைப் பாடுமாறு ஊக்குவித்த பகவான் ஸ்ரீ வெங்கைய ஸ்வாமிக்கும் இந்த நூலை ஆழ்ந்த பக்தியோடு அர்ப்பணிக்கிறேன்.

## பிரார்த்தனை

ஓ இறைவனே, நீ எங்கும் வியாபித்துள்ளாய். ஒவ்வொரு பிராணியிலும் எழும் எல்லா உயிர்த்துடிப்பு களுக்கும் காரணம் நீயே. உன் விருப்பப்படியே செயல் புரிந்து உன்னை உணரும்படி என்னை ஊக்குவிப்பாய்.

## இந்த நூலைப் பாராயணம் செய்ய வேண்டியதன் அவசியம்

**இறைவனை நம் கைகளால் வழிபடாமல் இருந்தால்**
**அவன் புகழை நம் வாயால் பாடாமல் இருந்தால்**
**கருணையும், உண்மையும் நம் இதயத்தில் இல்லாமல் இருந்தால்**
**அத்தகைய மனிதப்பிறவி தன்னைச் சுமந்த தாயின் வயிற்றுக்கு**
**பெரிய அவமானத்தையே ஏற்படுத்துகிறது.**

**- பாகவதம்**

இவ்விடத்தில், திவ்ய ஆத்மாவின் மஹிமை என்பது அண்டசராசரம் எங்கும் விளங்கும் ஆத்மாவின் அற்புத லீலைகள் என்று பொருள்படுகின்றது. சத்குருவின் நிலை பிரும்மா, விஷ்ணு, சிவன் ஆகியோரைக் காட்டிலும் உயர்ந்ததாகும். ஸ்ரீ வெங்கைய ஸ்வாமி, எங்கும் விளங்கும் அந்த திவ்ய ஆத்மாவின் ஒரு பரிபூரணமான ஸத்குரு அவதாரம் ஆவார். நம் நண்பர்களுடன் அவரது தெய்வீக லீலைகளின் அமுதத்தைப் பகிர்ந்து கொள்வதே நம் மனிதப் பிறவியின் பயனை பூரணமடையச் செய்கின்றது. இல்லாத பட்சத்தில் மேலே கூறியபடி நம் பிறவி இம்மண்ணுலகில் ஒரு வீணான வாழ்வாகவே ஆகின்றது. சுகமுனிவர் பாகவதத்தை (பெரும் ஞானிகளின் வாழ்க்கைச் சரித்திரத்தை) பரிக்ஷித் மன்னனுக்கு உரைத்து ஒரே வாரத்தில் நற்கதி அடையவைத்தார். சீரடி சாயிபாபாவும், பகவான் ஸ்ரீ வெங்கைய ஸ்வாமிகளும் பெரும் ஞானிகளின் வாழ்க்கை வரலாற்றைக் கேட்ட பின்பே இந்த பூத உடலை விடுத்து மறைந்தனர். எனவே கலியுகத்தில் பகவான் வெங்கைய ஸ்வாமிகள் போன்ற பெரும் ஞானிகளின் தெய்வீக லீலைகளை சிந்தனை செய்து வாழ்வது மட்டுமே மோட்சத்தை அடைவதற்கும் மற்றும் அன்றாட பிரச்சனைகளைத் தீர்க்கவும் ஒரே வழியாகும்.



குண்டூரைச் சேர்ந்த எஸ். ரமேஷ் பாபா மூலம் ஸ்வாமிகள் நடத்திய பாராயண யக்ஞம், ஸ்வாமிகளின் திவ்ய சரித்திரத்தைப் பாராயணம் செய்வது, நாம் செய்த பூர்வீக தீய கர்மங்களை சமனப்படுத்துகின்றது என்பதற்கும் நம்பிக்கை இழக்க வைத்து விடும் கேன்ஸர் போன்ற கொடிய நோய்களையும் குணப் படுத்திவிடுகின்றது என்பதற்கும் நிதர்சனமான எடுத்துக் காட்டாகும். எனவே பிரஹலாதன் கூற்றுப்படி நம் பிறவிப் பயன் முழுமை அடைய ஸ்வாமிகளின் தெய்வீக லீலைகளாகிய அமுதத்தைப் பகிர்ந்து கொள்வோம்.

---

திரு. ஸ்வாமிகளின் அருள் பெற்றவர்களின் முகவரிகள் இந்த புத்தகத்தில் தரப்பட்டுள்ளன. அவர்கள் அநுபவத்தின் உண்மையை உணர நேர்மையான பக்தர்கள் நேரடியாகத் தொடர்பு கொண்டு பயன் பெறட்டும். நேரடியாக தொடர்பு கொண்டு விசாரணை செய்யாமல் எல்லாம் கட்டுக் கதை என்று உரைப்பது மற்றவர் இதயத்தில் சந்தேகங்களை விதைத்து அவர்கள் நம்பிக்கையைத் தகர்க்கும் செயலாகும். இதுபோன்ற சோம்பேறித்தனம் நிரம்பிய வம்புப்பேச்சு குடி தண்ணீரில் விஷம் கலப்பது போலாகும்.

# சுவாமிஜியின் வாழ்க்கை வரலாறு

சோம்பள்ளி பிச்சம்மா பெஞ்சலையா என்ற பக்தி வாய்ந்த தம்பதியர்க்கு பகவான் ஸ்ரீ வெங்கைய ஸ்வாமிகள் ஆந்திர மாநிலத்தில் நெல்லூர் மாவட்டத்தில் நாகுலவெல்லதூரு என்ற கிராமத்தில் பிறந்தார். அறியாமையில் உழலும் எளிய பாமர மக்களைக் காக்க - மனித வடிவத்தில் வந்துதித்த, பிரபஞ்சத்தில் வியாபித்துள்ள சக்தியின் பூரண வெளிப்பாடே அவர் என்பதை குழந்தைப் பிராயத்திலிருந்து அவர் நிகழ்த்திய தெய்வீக லீலைகள் நிரூபித்தன.

எல்லா மனிதர்களைப் போல தானும் பிச்சம்மா பெஞ்சலையா தம்பதியர்க்கு பிறக்கவில்லை என்று ஒருமுறை அவர் தெரிவித்தார். அதாவது அவருடைய பிறவி பூமியில் ஒரு தெய்வீக காரணத்திற்காக உண்டாகியுள்ளது என தெரிகின்றது. இது ஸ்வாமிகளின் பின்வரும் கூற்றினால் அறியப்படுகின்றது. அவருடைய எண்பதாவது வயதில் பக்கவாதம் வந்து அவருடைய கால்கள் செயலிழந்து அவரால் நடக்கமுடிய வில்லை. அவருடைய சீடர்கள் மருந்து சாப்பிடும்படி அவரை வேண்டினார்கள். ஆனால் அவர் மறுத்து ''அப்படியென்றால் நான் மற்றொரு பிறவி எடுக்க வேண்டியிருக்கும்'' (அந்தக் கர்மாவை அநுபவிப்பதற்காக) என்று உரைத்தார். மேலும் ஒரு முறை ''கடலைத் தாண்டிக் கூட நான் பார்க்க இயலும். எனவே எனக்கு ஆன்மீகக் குருவின் அவசியம் இல்லை'' என்று கூறினார். அவருடைய சிறு பிராயம் முதல் அவருக்கு அதீதமான சக்திகள் கிட்டியிருந்தன. ஆனால் அறியாமையில் உழலும் பாமர ஜனங்களுக்கு அது தெரியவில்லை. ஒருமுறை அவருடைய சகோதரி மகன் அபாயகரமான ஜுரத்தால் பீடிக்கப்பட்டான். அவருடைய சகோதரி மங்கம்மா நம்பிக்கை இழந்து அழ ஆரம்பித்தாள். கருணைமிகு ஸ்வாமி தன் கையை



குழந்தையின் முகத்தின் மேல் அசைத்து, அவளிடம் வருத்தப்படத் தேவையில்லை என உரைத்தார். உடனே மருந்து இன்றி அந்தக் குழந்தையின் உடல் நிலை குணமாகியது. அந்த சமயம் ஸ்வாமிகளின் வயது பதினாறுதான். ஒருசமயம் ராஜபத்ம புரத்திலிருந்த தம் சகோதரி வீட்டிற்கு ஸ்வாமிகள் அவளை சொந்த கிராமத்திற்கு அழைத்துப் போக வந்தார். ஆனால் அவர் சகோதரிக்கோ ஒரே கவலை! இந்த பைத்தியக்காரச் சிறுவன் தன்னை நடு வழியில் விட்டுவிட்டு போய்விடுவானோ என்று! உடனேயே எல்லாமறியும் சக்தி படைத்த ஸ்வாமி தன் சகோதரியின் மௌனமான சிந்தனைகளை உணர்ந்து கூறினார், ''சகோதரி! உன்னை நடுவழியில் விட்டுப் போகும் அளவுக்கு ஒன்றும் நான் பைத்தியக்காரனல்ல''. இதெல்லாம் அந்த சிறுவனுக்கு மகத்தான சக்திகள் இளம் பிராயத்திலேயே இருந்தன என்பதை உணர்த்துகின்றன.

அவருடைய குழந்தைப் பருவத்திலிருந்தே அவர்தம் நன்னடைத்தைக்கு நல்ல பேர் பெற்றவர். தம் விளையாட்டுத் தோழர்களின் சண்டைகளை சமாதானப் படுத்துவதில் முடிசூடா மன்னனாக விளங்கியிருந்தார். கோடைக் காலத்தில் குப்பைக் காகிதங்களை கால்நடைகள் சாப்பிடுவதைக் கண்டு அவர் இதயம் இளகியது. உடனே தன் தலையில் உள்ள புல்லை அவைகளுக்குக் கொடுத்து விட்டு வெறுங்கையுடன் வீடு திரும்பினார். இத்தகைய கருணை நிறைந்த அவருடைய நடத்தையே மக்களை 'கிறுக்கு' வெங்கையா என்று அவரை அழைக்க வைத்தது.

அவருடைய இருபதாவது வயதில் சில நாட்கள் கடுமையான காய்ச்சலால் பாதிக்கப்பட்டார். சில நாட்கள் கழித்து அவர் மனப் பிராந்தி கொண்ட மனிதனாக, பைத்தியம் போல் நடக்க ஆரம்பித்தார். இரவும் பகலும் வீதிகளில் ''சாகலி யோகம் (வண்ணான் யோகம்) மங்கலி யோகம் (நாவிதன் யோகம்) ஜக்கல யோகம் டுப்டுக் டுப்டுக்'' என்று கூவிக் கொண்டே

ஓடுவார். அந்த நாட்களில் ஜனங்கள் சாதி அமைப்பு விதிகளை தீவிரமாக அநுஷ்டித்தனர். ஆனால் அவர் . வண்ணான், நாவிதன், ஹரிஜனங்கள் (தீண்டத்தகாதோர்) ஆகியோர் அளித்த தட்டுகளில் உள்ள உணவை சாப்பிட்டார். எனவே அவரை சாதிநீக்கம் செய்துவிட்டனர். ஆங்கில மருத்துவ விடுதி அருகாமையில் இல்லாததால் அவருடைய பெற்றோர்கள், எல்லாவிதமான நாட்டு வைத்தியமும் தாந்திரீக வைத்தியமும் செய்து பார்த்ததில் சிறிதும் பயனில்லாமல் போயிற்று. எனவே அவருடைய பெற்றோர்கள் விரக்தி அடைந்து அவரை சுதந்திரமாக விட்டு விட்டனர். அவர் கிராமத்தைச் சுற்றிலுமுள்ள தனிமைப் பிரதேசங்களில் திரிவது வழக்கம். ஒரு சிறுவன் புலியைக் கண்டால் எவ்வாறு அச்சத்துடன் ஓடுவானோ அதுபோல அவர் இளம் மங்கைகளைக் கண்டால் ஓடி விடுவார். தொடர்ந்து பல நாட்கள் அவர் வீடு திரும்ப மாட்டார். அவருடைய தாயார் அவரைத் தேடுவதற்காக உணவுப் பொட்டலங்களோடு கூலிகளை அனுப்பிவைப்பார். உணவுப் பொட்டலங்களைப் பார்த்தவுடன் கூலிகளைத் தொடர்ந்து வீடு வந்து சேருவார். நன்கு வயிறுபுடைக்க சாப்பிட்டு தன் தாய் தயாராக வைத்திருக்கும் புதிய உடைகளை அணிந்து கொண்டு மறுபடியும் காட்டிற்கு ஓடிப் போய் விடுவார்.

ஒரு சமயம் கிராமத்தை விட்டுப் போனவர் பல ஆண்டுகள் எவருடைய கண்களிலும் தென்படவில்லை. அவருடைய பெற்றோர்கள் தேடித் தேடி மகனைப் பற்றிய நம்பிக்கையை இழந்தனர். சில ஆண்டுகள் கழித்து அக்கம்பக்கத்து கிராமங்களில் அவர் தென்பட ஆரம்பித்தார். ஆனால் இந்தச்சமயத்தில் அவர் பைத்தியக்கார வெங்கையா என்பதற்குப் பதில் வெங்கைய ஸ்வாமி என்று அழைக்கப் படலானார். மேலும் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் குணப் படுத்தவே முடியாது என்று கருதப்பட்ட வியாதிகளைக் குணப்படுத்தினார்.



எதிர்கால அபாயங்களைப் பற்றி மக்களை எச்சரித்து அவைகளைத் தவிர்ப்பதற்கு அருள் பொழிந்தார். தன் ஆசிகளுக்கு அடையாளமாக வெண் நிற நூலைக் கழுத்தில் அணிந்து கொள்ள பக்தர்களுக்கு வழங்கினார். தமது தரிசனத்திற் காக வந்தவர்களைப்பற்றி புரிந்து கொள்ள இயலாத சங்கேத மொழிகளைக் கூறுவார். ஒரு தாளில் அவருடைய அருள் மொழிகளை எழுதுவித்து, தம் அருளின் அறிகுறியாக அந்தத் தாளைத் தொட்டுவிட்டுப் பக்தர்களுக்கு அதை வழங்குவார். அதுபோல் தன் கட்டைவிரல் அடையாளத்தையும் பேப்பர்களில் வைத்து அவற்றைத் தன் ஆசிகளின் அடையாளமாக கொடுத்து வந்தார்.

அவர் தம்மிடம் எப்போதும் நெருப்பை வைத்துக் கொண்டிருப்பார். அவர் போகும் இடமெல்லாம் தன் கையில் ஒரு பழைய கயிறை எடுத்துச் செல்வார். தலையில் கயிற்றுத் துண்டுகள் அடங்கிய ஒரு கட்டு, கைகளில் ஒரு சிறிய பானை, மற்றும் ஒரு தடி ஆகியவற்றோடேயே அவர் எப்போதும் காணப்படுவார்.

பல ஆண்டுகள் அவர் ராஜபாலம் அருகில் பெண்ணாறு நதிக் கரையிலும் சோமசீலா கானகத்திலும் அலைந்து திரிந்து வந்தார். ஒரே வீட்டிலிருந்து அவருக்கு உணவு கிடைத்தது. சாபபிட்ட உடன் அங்கிருந்து போய்விடுவார். அவர் எப்போதும் தன் கைகளாலேயே நீர் பருகினார். எந்த பாத்திரமோ, குவளையோ அவர் நீர் அருந்த உபயோகப் படுத்தவில்லை. அந்த சமயம் பல கிராமங்களில் காலராவும், அம்மை நோயும் கோரமாக தாண்டவமாடின. அப்படிப்பட்ட நாதியற்ற சமயத்தில் அவருடைய வெண் நூலும், அகில் புகையும், அவருடைய அருள் வாக்குமே, துயரங்களிலிருந்து மக்களைக் காத்து நின்றன. ஆரம்ப காலத்தில் ராஜபாலம் பக்கத்தில் அங்காளம்மாபோட்டு என்ற குன்றிலிருந்த குடிசை

யிலேயே அவர் தங்கியிருந்தார். ஒரு சிறிய அகல் விளக்கை எரியவிட்டுக் கொண்டு இரவு முழுதும் துந்தனா வாசிப்பார். அதன் பின்பு கோடிதீர்த்தம் என்ற இடத்திலிருந்த சிவன் கோயிலுக்கு அவர் இருப்பிடத்தை மாற்றிக் கொண்டார். அந்த இடத்தில் தன் இரண்டு கைகளாலும் இரண்டு தனித்தனி துந்தனாக்களை மீட்டியபடி ''ஓம் நாராயணா ஆதி நாராயணா'' என்ற மஹாமந்திரத்தை இரவு முழுதும் பாடுவார். தூக்கம் அவரை ஆட்கொண்டால் ஒரு முள்ளை எடுத்து தன் பற்களின் ஈறுகளைக் கிழித்து வாயிலிருந்து பெருகும் ரத்தத்தை நீரால் கழுவிக் கொள்வார். மந்திரங்களை ஜபித்த வண்ணம் தன்னை மறந்த நிலையில் அவர் இருக்கும் சமயம் தன் கைகளில் இருக்கும் துந்தனாக்களின் தந்திகள் அறுந்து விட்டிருப்பதைக் கூட அவர் அறியமாட்டார்.

பல ஆண்டுகள் சோமசிலா அருகில் பெண்ணாறு நதியில் மண் அணை கட்டுவதில் இரவு பகலாக அவர் ஈடுபட்டிருந்தார். அது இறைவன் பணி என்று தன் பக்தர்களை எல்லாம் அணை கட்டுவதில் உதவ வேண்டினார். தினமும் எவரோ ஒருவர் ஸ்வாமிக்கும் எல்லா பக்தர்களுக்கும் உணவுக்கு ஏற்பாடு செய்து வந்தனர். தொடர்ந்து ஈர மண்ணில் வேலை செய்ததால் அந்த நாட்களில் அவர் கைகளும் பாதங்களும் பாளம் பாளமாக வெடித்துக் காணப்பட்டன. அமானுஷ்யமான செயலாக அவர் ஒரு கால்வாய் வெட்டி ஆறு ஓடும் திசைக்கு எதிர்ப்புறத்தில் தண்ணீரை ஓட வைத்துக் காட்டினார். கால்வாய் ஆறுடன் சங்கமம் ஆகும் இடங்களில் நீரின் மேல் குச்சிகளையும் கள்ளி களையும் கொளுத்தி தீ மூட்டுவார். பின்பு தீயின் இரு பக்கங் களில் நீரைப் பொழிவார். இப்படியெல்லாம் செய்வது மக்களை காலரா, அம்மை போன்ற கொடூரமான வியாதிகளிலிருந்து காப்பாற்றவே எனக் கூறுவார். ஒரு தோலா (ஆங்கிலேய அரசாங்கத்தில் ஒரு ரூபாய் நாணயத்தின் எடை) தண்ணீர் மதிப்பு மூன்று கோடி ஆகும் என்பார். அதன்படி ஒரு நாளில்



உலகம் முழுதும் ஆகும் செலவு போக அன்றைய வேலைக்கு பத்து கோடி ரூபாய் வரவு ஆகி மிச்சம் நின்றது.

சில ஆண்டுகள் கழித்து ஏழைகளையும் அடக்கப்பட்ட எளியவர்களையும் காப்பாற்றும் இலட்சிய வேட்கையுடன் கிராமம் கிராமமாக அவர் செல்ல ஆரம்பித்தார். அச்சமயம் எவர் வீட்டிலும் அவர் தங்கவில்லை. மாறாக அவர் எப்போதும் இடிந்த கோவில்களையும், கிராம சத்திரங்களையும், மர நிழல் களையும், பாழ்பட்டு கிடக்கும் வீடுகளையுமே நாடினார்.

அவர் உணவுண்ணும் முறை மிகவும் அபூர்வமாகவும் விசித்திரமாகவும் இருந்தது. ஒரு பெரிய இலையில் ஒரு பேஸின் சாதம் முழுதும் கவிழ்த்துப் போடப்படும். பின் அவர் தன் விரல்களால் சாதத்தை இலையைச் சுற்றி எறிவார். அதன்பின் அவருக்கு அன்னம் இரண்டாவது முறையாக பரிமாறப்படும். தன் வலது உள்ளங்கையால் முதலில் தன் தலையைத் தொட்டு பின்பு சாதத்தைத் தொடுவார். அதன்பின் அந்த அன்னத்தைப் பிரசாதமாக வீட்டுச் சொந்தக்காரருக்கு அளித்து விடுவார். அதன்பின் மூன்றாவது பேஸின் சாதம் பரிமாறப்படும்போது அந்த அன்னக் குவியலின் நடுவிலிருந்து மிகக் கொஞ்சம் உண்டுவிட்டு மீதியை இலையைச் சுற்றி எறிவார். ருசியைப் பற்றி ஒரு போதும் அவர் பொருட்படுத்தமாட்டார். மிளகாய் வற்றல் சட்னிதான் அவர்க்குப் பிடித்தமான பதார்த்தம். அவர் ஊர் ஊராக அலைந்த சமயம் ஊர்க்கிணறுகளிலும், நதிகளிலும்தான் குளிப்பார். ஸ்வாமிகள் குளித்ததால் பல குட்டைகளும், துர்நாற்றம் வீசும் நீரைக் கொண்ட கிணறுகளும் தூய்மை அடைந்தன. வறண்ட கிணறுகளில் அவர் நீர் ஊற்றியவுடன், அவை எப்போதும் நீர் நிரம்பியவாய் மாறின. அவர் முதுமைக் காலத்தில் அசாதாரணமான அளவு சூடு நிரம்பிய நீரில் குளித்தார். கொலகமூடியில் சமாதிகோவில் அருகில் உள்ள குளத்தில் ஸ்வாமி குளித்து வந்தார். எனவே

அவருடைய புனித உடல் ஸ்பரித்தால் அந்த நீரே புனிதமடைந்தது. சமாதி கோவில் கிணறு தோண்டும் பணியை அவரே துவக்கி தம் கையால் சில கூடை மண் தோண்டி சுமந்து வெளியே போட்டார். இந்த ஒரு கிணறுதான் அந்த கிராமம் முழுதுக்கும், யாத்ரீகர்களுக்கும் நீர் அளித்து வருகிறது. பஞ்சக் காலங்களில் கூட அந்த கிணறு நீர் அளிக்கத் தவறவில்லை.

அவர் சஞ்சாரம் செய்து கொண்டிருந்த காலத்தில் ஒரு சமயம் எட்டு ஆண்டுகாலம் கொலகமூடியில் தங்கியிருந்தார். அவரது புனித அக்னி இரவு பகலாக எரிந்தபடியே இருந்தது. கொலகமூடியைச் சுற்றி இருந்த காட்டில் விறகுக்காகப் பயன்படும் மரங்கள் யாவும் தீர்ந்து விட்டன. சில காலம் அவர் அக்னியையும், கட்டை விரல்மை அடையாளத்தையும் தொடர்ந்தார். இதற்காக பக்தர்கள் மூட்டை மூட்டையாகச் செய்தித்தாள்கள், வெள்ளைத் தாள்கள், மைவில்லைகள் வழங்கினர். அவர் தன் பக்தர்களிடம் தன் கட்டைவிரல் அடையாளத்தை கவனமாகப் பாதுகாக்கும்படி எச்சரித்து அவை எதிர்காலத்தில் லட்சக்கணக்கில் மதிக்கப்படும் என்று உரைத்தார். அவர் கூறிய ஒவ்வொரு மொழியும் இன்று உண்மை ஆயிற்று. எதிர்கால உலக போக்குப் பற்றியும் பக்தர்களின் போக்குப் பற்றியும், அவர் அளித்த செய்திகள், தாளில் எழுதப்பட்டன. உதாரணமாக, ''கரண்டியின் உதவியில்லாமல் தயாரிக்கப்படும் உணவை உண்போம்'' என்று அன்றே எழுதிக் காட்டினார். இப்போது பிரஷர் குக்கர்களில் சாதம் தயாரிக்கப்படுவது அந்தக் கூற்று உண்மையாகி விட்டதை உணர்த்துகின்றது. ஒரு தடவை ஆசிரம பகுதியில் கையைக் காட்டி பதினான்கு தலைமுறை களாக பெரிய ஆவிபறக்கும் உணவுக் குவியல் அங்கு இருப்ப தாகக் குறிப்பிட்டார். இந்த இடத்தில் எப்போதும் புத்தம் புதிதாக நிகழும் அவரது தவத்தைத் தான் ஆவிபறக்கும் உணவாக அவர் குறிப்பிட்டார் என எடுத்துக் கொள்ளலாம். அந்த இடம் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக எவ்வளவோ மஹான்களின்



தவத்தால் வளமை யாக்கப்பட்டு, புனிதப் படுத்தப்பட்டுள்ளது. அந்த சக்தியின் விளைவாகவே, அந்த இடத்தில் தங்க ஆரம்பித்ததிலிருந்தே நம்பிக்கை இழக்க வைக்கின்ற அளவு மோசமான நோய்களால் தாக்கப்பட்டவர்களும் குணமடைந்து விடுகின்றனர். ஸ்வாமி உணவு ஏற்றுக்கொண்ட பின் தங்கிய பகுதிகள் எல்லாம் இன்று பாசன வசதி பெற்று பிரமாதமாக முன்னேறியுள்ளன. எங்கு மண்ணால் அணைகட்டுவாரோ அதே இடத்தில் தான் இன்று ஸோமஸிலா அணைகட்டப்பட்டுள்ளது. ஸோமஸிலாவிலிருந்து நூறு கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் கொலகமூடி சமாதி கோவில் வரை அதன் நீர் இப்போது பாய்கின்றது. பஞ்சக் காலங்களில் எவ்வளவு தடவை அவர் மழை பொழியவைத்தார் என்பதை யாராலும் கூற இயலாது. குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்டவர்களின் உடல் வலியையும், உபாதையையும் அவர் ஏற்று அந்த நோயாளிகளுக்கு நிவாரணம் அளித்தார். அவருடைய அருளால் பலர் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட்டனர். அவர் நிகழ்த்திய ஆச்சரியப்படத்தக்க அற்புதச் செயல்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

# மரணத்தின் மீது வெற்றி

1982-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 24-ஆம் தேதி மஹாசமாதி அடைந்த ஸ்வாமிகள் 16-9-1986 அன்று விஜயநகரம் சென்று என் நண்பர் வீட்டில் உணவு கேட்டுள்ளார். என் நண்பர் சீரடி சாயிபாபாவின் தீவிர பக்தர். அச்சமயம் ஸ்வாமி நரைத்த முடியுடன் முழங்கால்வரை வேட்டி கட்டி கையில் ஒரு தடியும் தோளில் வெள்ளைத் துண்டும் அணிந்திருந்தார். அப்போது என் நண்பர்க்கு ஸ்வாமி பற்றி ஒன்றுமே தெரியாது. அவருடைய தாயார் இலையில் உணவு போட்டு ஸ்வாமிகளிடம் கொடுத்தார். ஸ்வாமி உணவை பசுவிற்கு அளித்தார். ஒரு குவளை ரசம் அருந்தி தன் பசி அடங்கிவிட்டதாகக் கூறி அங்கிருந்து போனார். அவருடைய சந்நிதியில் அந்த அம்மையார் பெரும் ஆனந்தத்தை அநுபவித்தார். "சிறிது நேரத்துக்குப்பின் வீடு திரும்பிய தன் மகனிடம் அதைத் தெரிவித்தார். வந்த விருந்தினர் பசுவிற்கு உணவு கொடுத்ததால் அவர் சீரடி சாயிபாபாவின் மறுவடிவம் என்று கருதி நகரம் முழுதும் அவரைத் தேடினார் பிரயோஜனமில்லை. இது நடந்த ஒரு வாரத்தில் எதேச்சையாக ''அவதூத லீலை'' என்ற புத்தகம் (ஆசார்யா பரத்வாஜா என்பவரால் எழுதப்பட்டது) அவருடைய வீட்டிற்கு வந்தது. அதில் காணப்பட்ட புகைப்படத்தில் இருந்த நபர் பசுவிற்கு உணவு அளித்த நபர்தான் என்று அவருடைய தாயார் சந்தேகத்திற்கு இடமின்றி அறிவித்தார். ஸ்வாமிகளின் உருவமும், உரைகளும் அந்த அம்மையாரின் கூற்றை மெய்ப்பித்தன. என் நண்பர் ஸ்வாமிகளைப் பிரார்த்தித்து மறுபடியும் தன் இல்லம் வந்து தன்னை ஆசீர்வதிக்கும்படி வேண்டினார்.

மீண்டும் 12-10-1986 அன்று பகல் 12 மணிக்கு வெளி வாயில் கதவருகில் ஸ்வாமி அமர்ந்திருந்தார். என் நண்பரால் தன் கண்களை நம்பமுடியவில்லை. உடனேயே அவருடைய பாதங்களில் விழுந்து வணங்கி அவரை வீட்டுக்குள் வரும்படி வேண்டினார். ஆனால் ஸ்வாமிகள் மறுத்து விட்டார். தனக்கு அளிக்கப்பட்ட இனிய தின்பண்டங்களை அங்கு கூடிய மக்களுக்கு ஸ்வாமி விநியோகித்தார். பரங்கிக்காய் கறியை உண்டு பாயசத்தைப் பருகி விட்டுப் போய்விட்டார். அன்று முதல் விஜய நகரத்திலிருந்து பலர் கொலகமூடியிலுள்ள ஸ்வாமி சமாதிக்கு செல்லத்துவங்கினார்கள்.

மறுபடியும், மூன்றாவது தடவையாக தரிசனம் அருளி அவருக்காகத் தயாராக வைத்திருக்கும் புதிய போர்வையை எடுத்துச் செல்லும்படி என் நண்பர் ஸ்வாமியை வேண்டி பிரார்த்தனை செய்யத் துவங்கினார். 12-12-1986 அன்று மூன்றாவது தடவையாக கருணைமிகு ஸ்வாமி என் நண்பர் இல்லம் சென்றார். அக்கம் பக்கத்தில் உள்ள சுற்றி இருப்போர் பார்த்தபடி இருக்க, போர்வையை வாங்கிக்கொண்டு பால் அருந்திவிட்டு ஸ்வாமிகள் அங்கிருந்து சென்றுவிட்டார். இவ்வாறு ஸ்வாமி ஏசு கிறிஸ்துவைப் போல காலத்தையும் மரணத்தையும் வென்றவராக நிரூபித்துக் காட்டினார். இத்தகைய பெரும் மஹான்கள் தமது ஊன் உடம்பை உதறிவிடுவதை மகா சமாதி அடைகின்றனர் எனச் சொல்லப்படுகின்றது.

இதே போல 1985 மே மாதம் ஸ்வாமி மூன்று பெண்மணிகளுக்கு முன்பு சமாதி கோவிலில் தோன்றி பத்து நிமிடங்கள் தரிசனம் தந்து மறைந்துவிட்டார். ஸ்வாமிகள் ஊன் உடம்புடன் பகல் நேரத்தில் தரிசனம் தருவதாக பல்வேறு சம்பவங்கள் தெரியப்படுத்துகின்றன.

சூரியனும் சந்திரனும் இருக்கும் வரையில் தாம் பூமியில் இருப்பதாக அவர் வாக்களித்தார்.

# மகாசமாதிக்கு முன்பு உண்டான அநுபவங்கள்

தன் அனுபவத்தை விளக்குபவர் :

**ஜே.சி. பெஞ்சலையா - எர்ர பள்ளி**

(ஸ்வாமிகள் பிறந்த இடமான நாகுலவெள்ளாதூர் அருகாமையில்)

என் சகோதரர் ஜே. பெத்த பெஞ்சலையா ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியராக உள்ளார். அவருக்கு இருபத்து நான்கு வயதாகின்றது. அவருடைய கால்கள், கைகள், குரல் முதலியவை பக்கவாத நோயால் தாக்கப்பட்டு விட்டன. அவர் இயற்கை அழைப்புக்களைக்கூட படுக்கையிலேயே செய்து வந்தார். அவருடைய குரலைக் கூட புகழ்பெற்ற பக்கவாத நோய் நிபுணர்களால் பெற்றுத்தர இயலவில்லை. எல்லாவிதமான மருத்துவ சிகிச்சைகளாலும் விரக்தி அடைந்த என் தாயார் ஒரு நாள் கருணைமிகு ஸ்வாமியிடம் தன் மகனை குணப்படுத்துமாறு பிரார்த்தித்தார். ''அம்மா பில்லுபாடு மிட்டாலுவில் உளிந்திரா மரத்தின் கீழே ஒரு மாங்கொட்டை உள்ளது. அந்த மாங் கொட்டையைப் பொடிசெய்து உன் மகனுக்குக் கொடு. அவன் குணமாகிவிடுவான்'' என்று ஸ்வாமி கூறினார். எனவே பில்லு பாடு மிட்டாலுவிலிருந்து மாங்கொட்டையைக் கொண்டுவரும் படி என் தாய் என்னிடம் வேண்டினார். கிறுக்குத்தனமான ஸ்வாமிகளின் உளறல்களையும் என் தாயாரின் அறியாமையும் நான் எள்ளி நகையாடினேன். அடர்ந்த கானகத்தில் அந்த மாங்கொட்டையைத் தேடி அலைவது எளிதான காரியமல்ல. எனவே நாங்கள் அந்தச் சம்பவத்தை மறந்து போனோம்.

இரண்டு மாதங்கள் கழித்து என் சகோதரனை ஊஞ்சல் கட்டி பில்லுபாடு அருகில் இருந்த பாலாஜிபேட்டைக்கு சிகிச்சைக்கு அழைத்துப் போனோம். அது கடுமையான வெயில்காலம். பில்லுப்பாடு என்ற இடத்தில் ஒரு மரத்தின் அடியில் தங்கி ஓய்வு எடுத்தோம். அங்கு சிறுநீர் கழிக்கச் சென்ற



என் தந்தை அருகில் ஒரு உளிந்தரா மரத்தின் அடியில் ஒரு மாங்கொட்டையைக் கண்டார். உடனேயே இரண்டு மாதங்களுக்கு முன் ஸ்வாமிகள் கூறிய அறிவுரை என் தந்தையின் மனதில் பளிச்சிட்டது. அந்த மாங்கொட்டையை எடுத்துக் கொண்டு, பாலாஜிப்பேட்டைக்குச் செல்ல வேண்டும் என்ற என் வாக்குவாதத்தைப் புறக்கணித்து மறுபடியும் கிராமத்துக்கே போகலாம் என்று கூறி திரும்பச் சொல்லி விட்டார். ஸ்வாமிகள் அருளுரைப்படி அந்த மாங்கொட்டைப் பொடியை என் சகோதரனுக்குக் கொடுத்தோம். அடுத்தநாள் காலைப் பொழுதில் என் சகோதரன் நடப்பதையும் ஸ்வாமிகள் முன்பு மெய்சிலிர்த்து பிரார்த்தனை செய்வதையும் கண்டு வாயடைத்துப் போனேன்.

இந்த அனுபவம் படிப்பாலும் விஞ்ஞான அறிவாலும் எனக்கு உண்டாயிருந்த அகங்காரத்தைத் துடைத்து எறிந்தது. நான் ஸ்வாமிகளிடம் சென்று, என் முந்தைய பொருத்தமில்லாத பேச்சுகள் குறித்து மனதார வருந்தி அவர் முன் விழுந்து வணங்கினேன்.

1953-ஆம் ஆண்டில் பொயிந்தலா நரஸம்மா மிக செல்வந்தராக விளங்கினாள். அவளுடைய வீடு நரஸம்மா சமஸ்தானம் என அழைக்கப்பட்டது. அவளது கணவன் கொண்டா ரெட்டிக்கு அறுபது வயதிருக்கும். மூன்று பெண்மக்கள். ஆண் சந்ததி கிடையாது. துரதிருஷ்டவசமாக ஒரே ஆண்டில் நரஸம்மாவின் பெரும் பணமும் கற்பூரம் போல கரைந்து மறைந்து அவள் ஏழையாகி விட்டாள். அந்த அம்மையாரின் ஆட்டு மந்தைகளும் தொழுவத்திலிருந்த மாட்டுக் கூட்டமும் இறந்து விட்டன. பயிர் விளைச்சல் கூட பாதிக்கப்பட்டது. அவர்கள் எதிர்பாராத திடீர் விதியின் விளையாட்டில் மனம் தளர்ந்து துவண்டுவிட்டனர். ஒரு நாள், அந்த முதிய தம்பதியர் ஸ்வாமிகளை பிக்ஷைக்கு அழைத்தனர். ஸ்வாமி வீட்டு வாசற்படியிலேயே நின்று, ''ஓ! நானே துர்தேவதைகளின் உஷ்ணத்தில் வெந்துகொண்டிருக்கும்போது

நீங்கள் எப்படி இன்னும் வாழமுடிகின்றது? இங்கு நான் உணவு உட்கொண்டால் நான் ஏராளமாக செலவழிக்க வேண்டியிருக்கும் ஏராளமான கஷ்டங்களையும் அநுபவிக்க வேண்டியிருக்கும். எனவே இங்கே சாப்பிட இயலாது'' என்று கூறினார். உடனே நான் (ஜே.சி. பெஞ்சலையா) ஸ்வாமிகளிடம் கெஞ்சி, ''ஸ்வாமிகளே! நீங்கள் அவர்களைக் காப்பாற்ற மறுத்தால் வேறு யார்தான் அவர்களைக் காப்பாற்ற முடியும்? ஓ! கருணை தெய்வமே! தயவுசெய்து அவர்கள் அளிக்கும் உணவை ஏற்று விதியின் கொடுமையிலிருந்து அவர்களைக் காப்பாற்றுங்கள்'' என்று கேட்டுக் கொண்டேன். கருணைமிகு ஸ்வாமி ஒப்புக் கொண்டு பின் அந்த வீட்டின் சுற்றுச் சுவருக்குள் நுழைத்தார்.

ஸ்வாமிகள் இலையில் உணவு சாப்பிட்டு நடுப்பகல் முதல் மாலைவரை அந்த வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்தார். சூரிய அஸ்தமன சமயத்தில் அந்த வீட்டின் ஒவ்வொரு மூலையிலும் சில கவளங்கள் உணவை எறிந்தார். அவருடைய கண்கள் நெருப்பென ஜ்வலித்தன. அவர் சிங்கம்போல கர்ஜித்து ''போ! வெளியே போ'' என்று கூச்சலிட்டார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த அனைவரும் பயந்து நடுங்கினர். உடனேயே வடகிழக்கு மூலையில் அமைக்கப்பட்டிருந்த எருக்குழியிலிருந்து பெரும் ஜ்வாலை கிளம்பி மேலே எழுந்தது. அந்த ஜ்வாலை நடனமாடுவதுபோல வானில் நகர்ந்து மறைந்தது. எல்லா கிராம மக்களும் அந்த நெருப்பு தங்கள் வீட்டை எரித்துச் சாம்பலாக்கிவிடுமோ என பயந்து அலறினர். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. ஆனால் ஸ்வாமிகள் மூச்சு வாங்கியவராகக் கீழே விழுந்து விட்டார். சிறிது நேரத்திற்குப் பின் ஸ்வாமி உணர்வு வரப்பெற்றார். ''இனிமேல் எல்லாம் சரியாகிவிடும். பிரும்மாராட்சசியின் குடுமி என் கையில் கிடைத்துவிட்டது. இனி பயமில்லை. இந்தப் பக்கமே அது தலை காட்டாது. உன் வயிற்றில் இனி மீசை முளைக்கும் (அதாவது, உனக்கு ஆண் குழந்தை பெறும் வாய்ப்புள்ளது) இனி எல்லாம் நல்லபடியாக இருக்கும்'' என்று அருளினார்.



ஒரு ஆண்டுக்குள் அந்த அறுபது வயது மூதாட்டி கர்ப்பமடைந்து ஒரு ஆண் குழந்தையை ஈன்றெடுத்தாள். அதன்பின் அவர்கள் வளமுடன் வாழ்ந்து நன்றாக இருந்தனர். ஸ்வாமிகளின் இத்தகைய மகத்தான அற்புதங்களைக் காண அவர்கள் எத்தகைய அதிர்ஷ்டம் செய்திருக்கவேண்டும். இப்படிப்பட்ட மஹானுக்கு விருந்து உபசாரம் செய்ய அவர்கள் எவ்வளவு கொடுத்து வைத்திருக்க வேண்டும். இன்றும் கூட ஸ்வாமிகளின் பெயர் அந்த கிராமங்களில் உள்ள மக்களின் மனதில் மந்திர சக்தி உண்டு பண்ணுவதாக உள்ளது.

வாயில்லா ஜீவன்கள் புல், பூண்டு, தண்ணீர் இல்லாமல் பஞ்சக்காலங்களில் தவிப்பதைக் கண்டு கருணைமிகு ஸ்வாமிகளின் இதயம் வெண்ணெயாக இளகும்.

அது மிகக்கடுமையான கோடை காலம். நீண்ட காலமாக மழையே இல்லை. கால்நடைகள் தீனி தண்ணீர் இன்றித் தவித்து மடிந்தன, மிக ஆழமான கிணறுகளிலிருந்து பாசன நீர் இறைத்து எலுமிச்சைச் செடிகளின் உயிர்க்காக காளைமாடுகள் பட்ட கஷ்டங்களை வர்ணிக்கவே முடியாது. ஒருசமயம் கடும் வெயிலில் ஸ்வாமிகள் மரத்தின் அடியில் அக்னியின் அருகில் அமர்ந்திருந்தார். சல்லா சங்கர்ரெட்டியும் அவருடைய காளை மாடுகளும் எலுமிச்சைத் தோட்டத்துக்கு நீர்ப்பாய்ச்சிய பின் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். ரெட்டி ஸ்வாமிகளிடம், ''ஸ்வாமி! வாயில்லா ஜீவன்களின் விதியைப் பாருங்கள். தீனியும், நீரும் இன்றி அவை எவ்வளவு நாட்கள் உயிர் வாழ இயலும்? மழை இல்லாமல் எவ்வளவு நாட்கள் உயிர்வாழ இயலும் ஸ்வாமி?'' என்று வேண்டினான். பசித்த வயிற்றுடன் வேர்வை பெருகக் காணப்பட்ட காளைகளைப் பார்த்து ஸ்வாமிகள் இதயம் இளகியது. அவர் மேலே பார்த்து ''சிறிது நேரம் மட்டும்'' என்று கூறி தன் அக்னி வேலையில் ஈடுபட்டார். ஆச்சரியப்படும் வகையில் ரெட்டி சாப்பிட்டு முடித்த உடன் மழை பெய்ய ஆரம்பித்தது. சில மணி நேரங்களில் எல்லா குளங்குட்டைகளும் நிரம்பின. சங்கர் ரெட்டியைத் தவிர யாருக்கும் ஸ்வாமியின்

அருளால்தான் மழை பெய்தது என்ற உண்மை தெரியாது. இப்படி அவர் இயற்கையையே மகத்தான முறையில் தன் கட்டுக்குள் வைத்திருந்தார்.

### ஸ்வாமிகளின் அதிசயிக்கத்தக்க குணப்படுத்தும் சக்தி

தன் அநுபவத்தை உரைப்பவர் : **சூண்டலா மல்லையா** - திக்காரபாடு - வெங்கடாசலம் மண்டல் - நெல்லூர் மாவட்டம்

இன்றுபோல அப்போது ஸ்வாமிகளின் புகழ் விசாலமாகப் பரவி இருக்கவில்லை. ஸ்வாமிகளின் நூலும், தூபமும்தான் கால் நடைகளுக்கும், கஷ்டப்படும் ஏழைகளுக்கும் நோய் வந்து தாக்கிய சமயங்களில் ஒரே ஆதரவாக இருந்தன. ஒரு நாள் நாங்கள் ஆசிரமத்துக் கிணற்றைப் புதுப்பிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தோம். கூடைகளையும், கயிறுகளையும் உபயோகித்துப் பெரிய கற்களை கிணற்றில் இறக்கிக் கொண்டிருந்தோம். தவறிப்போய் ஒரு கல் கூடையிலிருந்து நழுவிக் கிணற்றுக்குள் விழுந்துவிட்டது. அந்தக் கல் முதல் மனிதரின் தோளிலும், இரண்டாவது ஆளின் இடுப்பிலும் மூன்றாவது நபரின் முன்னம் காலிலும் காயப்படுத்தியது. மூன்றாவது நபரின் முன்னங்கால் சதையில் பன்னிரண்டு அங்குல நீளமும் அரை அங்குல ஆழமும் உள்ள காயம் ஏற்பட்டுவிட்டது. காலிலிருந்து மிகுந்த அளவில் ரத்தம் பெருகியது. ''செத்தான், செத்தான்'' என்ற கூக்குரல் கிணற்றிலிருந்து எழுந்தது. ஒரு வழியாகக் காயம் அடைந்தவரை கிணற்றுக்கு வெளியே இழுத்து வந்து போட்டோம். ஸ்வாமிகள் அவர் அருகில் ஓடிச் சென்று அவருடைய காயத்தைத் தொட்டார். வானத்தை நோக்கி சீழ்க்கை ஒலியை எழுப்பிய பின் அவர் கூறினார் ''ஐயா! இது ஒன்றும் செய்யாது. வீட்டிற்குப் போக வேண்டாம். இங்கேயே வேலை செய்த வண்ணம் இரு''. கற்பனையே செய்துபார்க்க முடியாதபடி சாயங்காலத்துக்குள் காயத்தின் முக்கால் பகுதி ஆறிவிட்டது. மூன்றாவது நாளில் காயத்தின் அடையாளமே இல்லை. நாங்கள் எந்தவிதமான மருந்தும் போடவில்லை. அவருடைய அசாதாரண சக்தி இத்தகையது.



## மஹாசமாதி அடைந்த பின்னர்

லோகாயதம் பேசுபவர்களுக்கும், நாத்திகர்களுக்கும் நம்பிக்கை இல்லாதவர்களுக்கும் ஸ்வாமிகள் மஹா சமாதி அடைந்த பின்பு அவருடைய பக்தர்களுக்கு உண்டான அநுபவங்கள் கண்ணைத் திறப்பதாக அமைந்தன. இதை அவரை நம்பும் அடியார்கள் சஞ்சலமில்லாத நம்பிக்கையுடன் சாதனை புரியும் பாதையில் ஏகவேண்டும் என்பதற்கான எச்சரிக்கை யாகவே எடுத்துக்கொள்ளலாம்.

சத்குரு என்பவர் நொண்டியைத் தாவி மலையேற வைக்க இயலும்; ஊமையை இறைவன் புகழைப் பாடவைக்க முடியும் என்று கூறுவர். ஆனால் சத்குரு வெங்கைய ஸ்வாமிகள் ஒரு படி தாண்டிச் சென்று குருடர்க்குப் பார்வை வழங்கினார்.

குடுமுலா ஜெயம்மாவின் இல்லம் நெல்லூர் ஸ்டோன் அவுஸ்பேட்டையிலுள்ள விஜயலட்சுமி திரையரங்கத்தின் வடக்குப்புறம் சுமார் முப்பது வீடுகள் தாண்டி அமைந்திருந்தது. அந்த அம்மையார் வீடு வீடாக ஏறிப் பூ விற்று தன் நான்கு பெண்களையும், ஒரே பையனையும் காப்பாற்றி வந்தார். அவருடைய ஒரே ஆண் பையன் பிறந்து மூன்று மாதங்கள்தான் ஆகியிருந்தன. வயிற்றுப் போக்கு வந்து தாக்கியிருந்தது. மூன்று மாதங்கள் ஆங்கில மருந்து அளித்தும், அந்தக் குழந்தை கண் மூடிய வண்ணம் படுத்த படுக்கையிலேயே இருந்தது. வயிற்றுப் போக்கால் ஏற்பட்ட பலவீனத்தால்தான் குழந்தை கண்ணை மூடிக் கொண்டிருப்பதாக அவள் நினைத்தாள். குழந்தை எலும்பும் தோலுமாகக் காணப்பட்டது. அதன் அருகாமையில் துர்நாற்றம் வீசியது. ஒரு நாள் அந்த அம்மையார் குழந்தைக்கு முகப் பவுடர் போட்டுக் கொண்டிருந்தபோது குழந்தையின் இடது கண் வெண் விழிப்படலத்திலிருந்து ஒரு திரவத்துளி உருண்டு கீழே விழுந்தது.

கண் சிகிச்சை நிபுணர் கண்களைப் பரிசோதித்துப்பார்த்து இரண்டு கண்களும் தொற்றுநோய்க் கிருமிகளால் முழுவதும்

பாதிக்கப்பட்டுவிட்டன என்று கூறினார். இரண்டு கண்களிலும் சிறிதுகூடக் கறுப்புநிறமின்றி வெண்மையாக ஆகிவிட்டன. மேலும் இரண்டு கண்களிலும் வெண்ணிற துகள்கள் கட்டியாகி விழிப்படல திரவம் ஒரு சொட்டுக் கூட இல்லாமல் அவை காணப்பட்டன. டாக்டர் அந்தக் குழந்தையை சென்னைக்கு எடுத்துப் போவதுகூட வீண் என்று கூறிவிட்டார். துயரத்தால் பீடிக்கப்பட்ட அந்த அம்மையார் மறுபடியும் நான்காவது நாள் அதே டாக்டரை அணுகி இன்னும் ஒரு தடவை மறு பரிசோதனை செய்யும்படி வேண்டினார். ஆனால் டாக்டரோ அந்தத் தாயை அவளுடைய கவனமின்மைக்காக திட்டித் திருப்பி அனுப்பி விட்டார்.

அவளுடைய பக்கத்து வீட்டுக்காரர் பப்பு சேஷைய்யாவின் அறிவுரைப்படி அவள் கொலகமூடிக்குக் குழந்தையை எடுத்து வந்தாள். அவள் ஸ்வாமிகளுக்கு இருபது ரூபாய்க்குக் கற்பூரம் வாங்கித் தருவதாகவும் அவரது சமாதிக்கருகில் ஐந்து இரவுகள் தூங்குவதாகவும் நேர்ந்து கொண்டாள். என்ன ஆச்சரியம்! அடுத்த சனிக்கிழமை அன்று குழந்தையின் இரண்டு கண்களிலும் பார்வை வந்துவிட்டது. குழந்தையைக் கடந்த இரண்டு மாதங்களாக துன்பப்படுத்திய வயிற்றுப் போக்கும் நின்று விட்டது. இவ்வாறு ஸ்வாமி தன்னுடைய ஆட்டு மந்தையில் மற்றொரு ஆட்டை சேர்த்துக் கொண்டு அதற்கும் அன்பும் நம்பிக்கையும் கொடுத்து ஆசீர்வதித்தார். எந்தவிதமான மருந்தும் இல்லாமல் கண் பார்வை கொண்டு வரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**தன் அநுபவத்தைக் கூறுபவர் : இரகா ஸ்ரீதேவம்மா**
**W/o.** ரமணைய்யா - **தண்ணீர் தொட்டி** அருகில் - **(வாட்டர் டேங்க்)**
**வெங்கடேஸ்வரபுரம் - வடக்கு பெண்ணாறு பாலம் - நெல்லூர்**

1989-ம் ஆண்டு தீபாவளி சமயம் என் ஒரே பையன் சுரேந்திர பாபுவுக்கு மூன்று வயதுதான் இருக்கும். தீபாவளி அன்று நன்றாக இருந்தான். அதன் பின் ஐந்து நாட்கள் காய்ச்சலால் அவதிப்பட்டான். ஐந்தாவது நாள் அவனது



இரண்டு கால்களும் உணர்விழந்தன. அவனால் கால்களை நீட்டவே முடியவில்லை. நெல்லூர் மருத்துவர்கள் அது போலியோ வியாதிதான் என்று உறுதிப்படுத்தி சிகிச்சைக்குச் சென்னைக்குப் போகும்படி கூறிவிட்டனர். மின்சார சிகிச்சைக்காக ஆயிரக்கணக்கில் செலவழித்தும் வீணாயிற்று. மலம் கழிக்க முயலும்போது உடல் எடையை அவனுடைய கால்களால் தாங்க முடியவில்லை. எனவே அச்சமயம் அவனைக் கைகளால் தாங்கிப் பிடித்துக் கொள்ள வேண்டியிருந்தது. என் மனம் துயரச் சுமையால் கனத்து நான் உணவையும் உறக்கத்தையும் இழந்தேன். என் மகன் நிலை எனக்கு ஏற்படுத்திய சித்ரவதையை கடவுள் மட்டுமே அறிவார். அப்போது சுவாமிகளைப் பற்றி எதுவும் எனக்குத் தெரியாது.

என் சகோதரர் பகவான் ஸ்ரீ வெங்கைய ஸ்வாமிகள் மட்டுமே என் மகனைக் காப்பாற்றுவார் என்று உறுதியாக நம்பினார். நான் ஸ்வாமியின் புகைப்படம் முன்பு நமஸ்கரித்து நெடுநேரம் அழுதேன்.

என் மனம் லேசாகி சரியானவுடன், பூமாலையும் அரிசியும் காணிக்கையாக சமர்ப்பிக்கின்றேன், என் மகனுக்கு கால்கள் தந்து உதவவேண்டும் என்று ஸ்வாமிகளிடம் கெஞ்சினேன். அன்று இரவு என் கனவில் ஒரு டாக்டர் என் மகனின் இருகால்களிலும் ஊசிபோட்டுவிட்டுத் தன் கருவி களை எடுத்து செல்வதுபோல ஒரு தோற்றம் வந்தது. பிரமிக்க வைக்கும் முறையில் அடுத்த நாள் காலை என் மகன் நடக்க ஆரம்பித்துவிட்டான். அந்தக் கணத்தில் நான் அடைந்த மகிழ்ச்சியை என்னால் விவரிக்க இயலாது.

என் மகன் நடந்தாலும் முழுமையான அளவில் சரியாக இல்லை. மறுபடியும் கண்ணீர் பெருக, ஸ்வாமிகளிடம் வேண்டினேன். ஒருநாள் என் கனவில் ஒரு கிழவர் என் மகன் முதுகில் தட்டியபடி தன் கைப்பிடித்து நடந்துவருமாறு அழைத்தார். அடுத்தநாள் முதல் அவன் சரியாக நடக்க ஆரம்பித்துவிட்டான். நான் ஸ்வாமிகளுக்கு கொலகமூடியில்

நாற்பது நாட்கள் பணிவிடை செய்தேன். என் பிரார்த்தனைப்படி பூமாலையும், அரிசியும் காணிக்கையாகச் செலுத்தினேன். என் வாழ்வு முழுவதும் நான் ஸ்வாமிக்குக் கடமைப்பட்டவள். நம்பிக்கை, மலைகளை அசைத்துக்காட்டும். குருவிடமோ கடவுளிடமோ இத்தகைய அபார நம்பிக்கையை ஏற்படுத்த வல்லது நாம் முந்திய பிறவிகளில் செய்த நற்செயல்களே. ஸ்வாமிகள் நம்மைத் தன்பணி பூர்த்திசெய்ய கருவியாகவே பயன்படுத்திக் கொள்கின்றார் என நாம் அறிகிறோம்.

தன் அநுபவம் உரைப்பவர் : **தெனாலி கோதண்ட ராமையா** - பத்வால் போஸ்ட் ஆபீஸ் - மனுபோலு மண்டல் - நெல்லூர் மாவட்டம்

1986-ஆம் ஆண்டு, எனக்கு மாரடைப்பு வந்ததால் 'கோமா'வில் இருந்தேன். என்னை நெல்லூரில் உள்ள சிந்தூரா நர்சிங் ஹோமில் சேர்த்துவிட்டனர். இரண்டாவது நாள்தான் எனக்கு நினைவு வந்தது. ஒருவார சிகிச்சைக்குப் பின்பு நிலைமை அபாயகரமாக இருந்ததால் டாக்டர் அறுவை சிகிச்சைக்காக என்னைச் சென்னைக்கு அனுப்பினார். சென்னை போகும் வழியில் என் சகோதரர் என்னை கொலகமூடிக்கு அழைத்துச் சென்றார். சமாதிமந்திரில் ஒரு இரவு தங்கினோம். அடுத்த நாள் என்னைச் சென்னை விஜயா நர்சிங்ஹோமில் சேர்த்தார். பரிசோதனை செய்த பின்பு டாக்டர் கணேஷ், ''இருதய ரண சிகிச்சை செய்தால்தான் உயிர்பிழைக்க முடியும்'' என்றார். எனவே உடனே எண்பதாயிரம் ரூபாய் கட்டச் சொன்னார்கள். நான் அறுவை சிகிச்சை செய்து கொள்ள மறுத்து மருந்துகளாலேயே குணப்படுத்த முயலுமாறு கேட்டுக் கொண்டேன். பன்னிரண்டு நாட்கள் மருந்து கொடுத்தபின் என்னை அனுப்பிவிட்டார்கள். ''இரண்டு இதய வால்வுகள் மோசமாக பாதிக்கப்பட்டுவிட்டன. அவைகளுக்குப் பதிலாக புதிய வால்வுகள் பொருத்தப்பட வேண்டும். எந்தச் சமயமும் மிகக் கடுமையாக மாரடைப்பு ஏற்படக்கூடிய அபாயம் உள்ளது. டாக்டரின் நேரடிப் பார்வையில் இருந்து அவசர ஊசிகள்



தேவைப்படும் போதெல்லாம் போட்டுக் கொள்ள வேண்டும். குளியல் அறை இணைந்த அறையில் பூரண ஓய்வு படுத்தபடி எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு சில தப்படிகள் கூட நடக்கக் கூடாது'' என்றெல்லாம் அறிவுரைத்தார்.

நான் வீடு வந்தபின்பு ஸ்வாமிகளின் சமாதிக்கு வாரம் ஒரு முறை ஒழுங்காகச் சென்று வந்தேன். என் பாரத்தை எல்லாம் ஸ்வாமிகள் மீது போட்டுவிட்டு ஸ்வாமிகள் தரிசனத்திற்காக கொலகமூடிக்கு வாரம் ஒருமுறை பத்து கிலோ மீட்டர் நடந்து சென்று வந்தேன். வாரம் ஒரு முறை . பத்து கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று வந்தாலும் டாக்டர்கள் எதிர் பார்த்தபடி எந்த விதமான இதயக் கோளாறும் எனக்கு உண்டாக வில்லை என்பதுதான் மிக ஆச்சரியமான விஷயம்.

மூன்று மாதங்கள் கழித்து நான் பரிசோதனை செய்து கொள்வதற்குச் சென்னை சென்றேன். டாக்டருக்கு நான் நடக்கிறேனோ என்று சந்தேகம் எழுந்து என் புதுமையான நடத்தை குறித்துச் சினம்கொண்டார். மறுபடியும் மருந்துச் சீட்டு எழுதிக் கொடுத்து படுக்கையில் ஓய்வு எடுத்தாகவேண்டும் என்று எச்சரித்து அனுப்பினார்.

இதற்கிடையில், மேலும் தீவிரமாக கொலகமூடி ஸ்வாமிகள் தரிசனத்திற்கு வாரம் ஒரு தடவை நடந்து செல்லுவதைத் தொடர்ந்தேன். ஸ்வாமிகளின் அருளால்தான் எனக்கு எந்த விதமான இதயக்கோளாறும் வருவதில்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும். எனவே அதன்பின் நான் மருந்து எதுவும் சாப்பிட மாட்டேன் என்றும் வாரம் ஒரு முறை அவர் தரிசனத்திற்காக நடந்தே வருவேன் என்றும் ஸ்வாமியிடம் பிரதிக்ஞை செய்து கொண்டேன்.

இரண்டு மாதங்கள் கழித்துத் தொலைந்துபோன என் எருமை மாடுகளைத்தேடி நாளுக்கு இருபது கிலோ மீட்டர் வீதம் தொடர்ந்து நான்கு நாட்களுக்கு நடக்க வேண்டி வந்தது. ஆனால் இதயக் கோளாறு ஒன்றும் ஏற்படவே இல்லை.

இரண்டாவது தடவையாக நான் மருத்துவப் பரிசோதனைக்குச் சென்றபோது டாக்டர் பூரண் திருப்தி தெரிவித்து தொண்ணூறு சதவீதம் சரியாகி விட்டதாகக் கூறி அதே மருந்துகளையும் அதே முறையில் ஓய்வும் எடுத்துக் கொள்ளுமாறு அறிவுரைத்தார். உடனே டாக்டரிடம் கடந்த மூன்று மாதங்களாக மாத்திரையே சாப்பிடவில்லை என்பதைத் தெரிவித்து அத்தனை மாத்திரைகளையும் காட்டியபோது திகைத்து வியந்தார். எந்த விதமான மருந்தும் சாப்பிடாமல் ஓய்வும் எடுத்துக் கொள்ளாமல் நான் குணமடைந்தது அவருக்கு மர்மமாக இருந்தது. ஸ்வாமிகளின் தரிசனத்திற்கு நான் மேற் கொண்ட நடைப்பயணம் பற்றித் தெரிவித்தபோது ஸ்வாமிகளின் மகத்தான சக்திகள் பற்றி அவருக்கும் நம்பிக்கை உண்டாயிற்று.

பதினைந்து நாட்கள் கழித்து ஸ்வாமிகள் என் கனவில் ''பிரசாரம் செய்ய நான் உன்னைக் கருவியாக உபயோகப் படுத்திக் கொள்கின்றேன். உன்னுடைய அனுபவங்களைப்பற்றி அக்கம் பக்கத்திலுள்ள கிராம மக்களுக்கு தெரிவிக்கவும்'' என்று கூறினார். எனவே எனது அற்புத அநுபவத்தை விவரித்துப் பிரசுரங்கள் விநியோகித்தேன். எனது வீட்டில் அகண்ட நாமஜபம், பஜனை, இரவுபகலாக அக்னி குண்டம் என நாற்பது நாட்கள் நடத்தினேன். அந்த காலம் முழுதும் எந்த விதமான முன் திட்டமும் இன்றி வெகுஜன அன்னதானம் எப்படி நடந்தது என்பது எனக்குப் புரியவில்லை. வந்தவர்கள் யாவரும் தம் சொந்தச் செலவில், தம் சொந்த இஷ்டப்படியே எல்லா வற்றையும் நடத்தினார்கள். எல்லாமே ஸ்வாமிகளின் அருளால் தான், அவரது பிரசாரத்தின் அம்சமாக நடந்திருக்கின்றது. அவருடைய ஆக்ஞைகளுக்குக் கட்டுப்படுவதைத் தவிர நம்மால் செய்ய முடிவது வேறு ஏதும் இல்லை.

முன் ஜன்மங்களில் ஏற்பட்ட தொடர்புக்குத் தக்கபடி நாம் நம் சத்குருவின் பால் தக்ககாலத்தில் ஈர்க்கப்படுகின்றோம்.

என் நண்பரின் மனைவிக்கு பிரசவ சமயத்தில் ஆரம்பித்த இரத்தப் போக்கு தொடர்ந்து கொண்டே இருந்ததால் கடந்த



7 ஆண்டுகளாகத் துன்புற்று வந்தாள். மிக பலவீனமாகி துயரத் தால் அவள் பீடிக்கப்பட்டிருந்தாள். ஒவ்வொரு பிரசித்தமான மருத்துவருடனும் அவர்கள் தங்கள் அதிர்ஷ்டத்தைச் சோதித்துப் பார்த்தார்கள். ஆனால் எவருக்குமே வியாதியின்மூலம் அறிய முடியவில்லை. ஹைதராபாத் நகரின் மருத்துவ நிபுணர்கள் சிகிச்சைக்கு எவ்வளவு பணம் செலவாகும் என்று கூற இயலாது என்றனர். மேலும் சிகிச்சை ஆரம்பித்த பின்பு எவ்வளவுநாள் தொடரும் என்றும் கூற முடியாது என்று கூறிவிட்டனர். சிகிச்சையை நடுவே நிறுத்தினால் முழு சிகிச்சையே வீணாகப் போய்விடும். எனவே சிகிச்சையை ஆரம்பிக்கலாமா வேண்டாமா என்று முடிவெடுக்க முடியாத நிலையில் இருந்தனர்.

ஒருநாள் அவளுடைய சிநேகிதிகளில் ஒருவர் பகவான் ஸ்ரீ வெங்கைய ஸ்வாமி பற்றி சிறிய புத்தகம் ஒன்று அளித்தார். அந்தப் புத்தகம் மிக சுவாரஸ்யமாக இருந்ததால் அதைத் திரும்பத்திரும்ப படித்துப் பார்த்தாள். அப்போது ஸ்வாமி அவள் இதயத்திலிருந்து பேசினார். ''நீ இங்கிருந்தால் நான் எப்படி குணப்படுத்த இயலும்? கொலகமூடி வருக. நான் உன்னை குணப்படுத்துகின்றேன்'' என்றார். தன் இதயபூர்வமான வணக்கத்தை அந்தப் புத்தகத்தில் இருந்த ஸ்வாமிகளின் படத்திற்குச் சமர்ப்பித்து, ''ஸ்வாமிகளே! கடந்த ஏழு ஆண்டு களாக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றேன். நான் எப்படி கொலகமூடி வர இயலும்? இன்று மாலைக்குள் ஏதாவது எனக்கு சிறிது நிவாரணம் அளித்தால், நான் உன்னைத் தர்சிக்க கொலகமூடி வருவதாக வாக்களிக்கிறேன்'' என்றாள்.

அன்று மாலையே ஒரு ஆச்சரியத்துள் ஆச்சரியம் நடந்தது. இரத்தப் போக்கு முற்றிலும் நின்றுவிட்டது. கடந்த ஏழு ஆண்டுகளாக இரத்தப் போக்கிலிருந்து இப்படி ஒரு நிவாரணம் அவளுக்கு உண்டானதே இல்லை. அந்தப் பேருவகையில் அன்று இரவு முழுதும் பிரார்த்தனைகளிலும், ஸ்வாமிகளின் மகத்துவத்தைப் பற்றிய உரையாடல்களிலும் நேரத்தைக்

கழித்தனர். ஒருவாரம் பார்த்தபிறகு ஸ்வாமிகளின் அருளால் தான் அது நடைபெற்றுள்ளது என்பதை உறுதி செய்தபின் கொலகமூடியில் உள்ள அவருடைய சமாதிக்குச் சென்று 108 தடவை பிரதட்சணம் செய்தனர். இவ்வாறு அவர்கள் தக்க தருணத்தில் தமது நிர்ணயிக்கப்பட்ட குருவைச் சந்தித்தனர்.

தன் அநுபவம் உரைப்பவர் : **தோகுரு வெங்கையா** - ரயில்வே மெயில் டிரைவர் (ஜனாதிபதி பரிசு பெற்றவர்) போகோலு - பிட்ரகுண்டா - நெல்லூர் மாவட்டம்

புனித யாத்திரைக்காக சென்ற என் நண்பர் ஒருவர் நீண்ட காலமாகத் திரும்பவேயில்லை. நான் கொலகமூடி வந்து ஸ்வாமிகளிடம் என் நண்பரை வீட்டுக்கு வர வைக்க வேண்டு மென்று பிரார்த்தித்தேன். அதே நாள் இரவு என் கனவில் என் நண்பன் வந்து தான் வீட்டிற்கு விரைவில் வந்து விடுவதாகத் தெரிவித்தான். ரிஷிகேசத்தில் இருந்த என் நண்பருக்கு, அதே இரவில், வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்ற தீவிர துடிப்பு ஏற்பட்டு வீட்டிற்குத் திரும்பினார்.

பிரயாகையில் கும்பமேளாவில் கலந்து கொண்ட பின்பு 2-2-1989 அன்று கொலகமூடி வந்தேன். அன்று இரவு என் கனவில் ஸ்வாமிகள் கோவிலிலுள்ள சீதாராமர் சிலைகளுக்குக் கற்பூரம் காட்டினார். கற்பூரத்தட்டில் காசு போடும்படி ஸ்வாமி கூறினார். நான் ஒரு காசு போட்ட உடன் அது இரண்டு தங்கக் காசுகளாக மாறிவிட்டது. ஸ்வாமிகள் ஒரு மந்திரம் சொல்லி அதன் அர்த்தத்தைக்கூட விளக்கினார். அவர் துனிக்கு அருகில் என்னை உறங்குமாறு பணித்தார். இவ்வாறு கருணைமிகு ஸ்வாமிகள் நான் அடைய வேண்டிய லட்சியத்தையும், வழியையும் காட்டி ஒவ்வொரு நிமிடமும் எனக்கு வழி காட்டுகின்றார். (துனி - புனித அக்னிகுண்டம்)

ஒரு நாள் ஸ்வாமிகளின் சுப்ரபாத கேசட்டை ராமர் கோவில் பூசாரியிடம் உபயோகித்துக் கொள்ளுமாறு அளித்தேன். அவருக்கு ஸ்வாமிகள் பற்றி ஒன்றும் தெரியாது. எனவே கேசட்டைப் பயன்படுத்தாமல் வைத்துவிட்டார்.



ஸ்வாமிகள் பூசாரியின் கனவில் வந்து காலை நேரத்தில் கேசட்டு பாடல்களை வைக்குமாறு சொன்னார்.

1991-ஆம் ஆண்டு என் முதுகெலும்புக்கு ஏதோ ஆகி என் தலையையோ, கழுத்தையோ திருப்ப முடியாமல் ஆகிவிட்டது. நான் படுக்கையில் படுத்துக்கொண்டபோது இரு புறங்களிலும் திரும்புவது இயலாது போயிற்று. ஹைதராபாத்தில் இருந்த ஒரு மருத்துவ நிபுணர் நாற்பது-ஐம்பது ஆயிரம் ரூபாய் செலவில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருக்கும் என்றார். நோயாளிக்கு நடக்கவே முடியாதபடி ஆகும் சமயம்தான் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றார். எனவே நான் கொலகமூடி வந்து ஸ்வாமியிடம் பிரார்த்தனை செய்தேன். அன்று இரவு ஸ்வாமிகள் என் கழுத்து எலும்பில் ஒரு துளை இட்டு அந்தத் துளையின் பக்கத்தில் அழுத்தும்படிக் கூறினார். பற்பசை போன்ற ஒரு பொருள் இரண்டு தடவை வெளி யேறியது. அடுத்தநாள் எனக்கு உடல்நிலை சரியாகிவிட்டது.

ஸ்வாமிகள் நாம் பிரார்த்தனை செய்யும் நேரங்களில் மட்டுமன்றி நாம் அவரை அழைக்க மறக்கும் சமயங்களிலும் நமக்கு பதிலளிக்கின்றார். நம் நல்வாழ்வுக்காக அவர் இரவு பகலாக துணையாக நிற்கின்றார். ஒருதடவை அவர், ''நூல் அறுந்துபோகாமல் இருக்கும் வரையில் நான் உங்களுடன் இருக்கின்றேன்'' என்று உரைத்திருக்கின்றார். ஸ்வாமிகள் குறிப்பிடும் பிணைக்கும் இழை எது? ''அவர் எல்லா உயிர்களிலும் உள்ளார்'' என்ற அந்த இடைவிடாத சிந்தனையும் இதனைப் புரிந்து கொண்டபின் அதன்படி நாம் மற்ற பிராணிகளோடு நடந்து கொள்ளும் முறையுமே அறுந்து போகாத நூல் ஆகும். ஸ்வாமிகளைப் பற்றி எதுவுமே அறியாத புதியவர்களைக்கூட ஸ்வாமிகள் காப்பாற்றிய சம்பவங்கள் பல உள்ளன. அவை நடந்தபின்பு அவர்கள் ஸ்வாமிகளின் தீவிர பக்தர்களாக மாறிவிட்டனர்.

தன் அநுபவம் உரைப்பவர் : **லக்காகுல கிருஷ்ணைய்யா மருந்துக்கடை வைத்திருப்பவர்** - குல்லூரு அஞ்சல் - காலுவாய்

மண்டல் - நெல்லூர் (ஆந்திர பிரதேசம்) (தன் மகனை சென்னை அப்போலோ மருத்துவ மனையில் சேர்த்தவர் கூறுகின்ற அநுபவம்.)

என் மகன் ஸ்ரீனிவாசலுக்கு வயது பதினைந்து. நல்ல ஆரோக்கியத்துடன் இருந்தான். 17-10-1987 அன்று பகல் 3 மணிக்கு வீட்டில் சப்பாத்தி சாப்பிட்டவன் தலைவலி என்றான். பின் வாந்தி எடுத்தான். அதன்பின் வலிப்பு நோய் தாக்கியது. உடனே அவனை கலுவாயில் ஒரு நர்சிங் ஹோமில் சேர்த்து சலைன் கொடுக்கப்பட்டது. ஊசிகள் போடப்பட்டன.. ஆனால் பிரயோஜனமில்லை. அடுத்த நாள் நெல்லூர் குழந்தை வைத்திய நிபுணர் ராமகிருஷ்ண ரெட்டியின் நர்சிங் ஹோமில் அவனைச் சேர்த்தோம். மூன்று நாள் சிகிச்சை கொடுத்த பிறகு அவனை சென்னை அப்போலோ ஆஸ்பத்திரியில் சேர்த்துவிடுமாறு அவர் அறிவுரை வழங்கினார். சென்னை சென்று அப்போலோ மருத்துவமனையில் அவனைச் சேர்ப்பதற்கிடையில் வயிற்றுப் போக்கு வேறு அவனைத் தாக்கிவிட்டது. ஸ்கேன்னிங் ஆஞ்சியோகிராம் போன்ற சோதனைகள் நடத்திய பிறகு உடனடி ரண சிகிச்சை செய்ய வேண்டியதால் பெரும் செலவு செய்ய என்னால் இயலுமா என்று டாக்டர் வினவினார். நான் என்.ஜி.ஓ. தான் என்றும் ஓரளவுக்கே என்னால் செலவு செய்ய இயலும் என்றும் உரைத்தேன். என் சம்மதமின்றியே டாக்டர் என் மகனை அப்போலோ ஆஸ்பத்திரியிலிருந்து discharge செய்து விட்டு, பொது மருத்துவமனையில் சேர்க்குமாறு கூறிவிட்டார். நாங்கள் பொது மருத்துவமனையில் சேர்ந்தபின் சில மணிநேரங்கள் கூட தங்கமுடியவில்லை. என் மகனை டாக்ஸியில் வைத்து நெல்லூர் திரும்பக் கொண்டுவந்து நெல்லூர் பிரபாகர் நாயுடு - ராதா மருத்துவ மனையில் சேர்த்துவிட்டேன். மிக மோசமான நிலையில் சிறுவனை அங்கும் இங்கும் அலைய விட்டதற்கு டாக்டர் என்னைத் திட்டினார். மேல் சிகிச்சைக்கு விசாகபட்டினம் அல்லது ஹைதராபாத் செல்லுமாறு கூறினார். நெல்லூரில் இரண்டு நாள் ஓய்வுக்கப் பிறகு 23-10-1987 அன்று



மறுபடியும் சென்னை அப்போலோ மருத்துவமனையில் அவனைச் சேர்த்துவிட்டோம். பத்தாயிரம் ரூபாய் செலவில் இரண்டாவது முறையாக ஸ்கேன்னிங், ஆஞ்சியோகிராம் எடுத்துப் பார்த்தும் டாக்டர்களால் வியாதிக்கான காரணத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. டாக்டர் மூளையில் அறுவை சிகிச்சை செய்து பார்க்க வேண்டும்; அதற்கு முப்பதாயிரத்தி லிருந்து நாற்பதாயிரம் வரை செலவாகும் என்றார். நான் டாக்டர்களிடம் எழுபதாயிரம் ரூபாய்கள் செலவானாலும் அறுவைச் சிகிச்சை இல்லாமல் மருந்து மூலம் குணப்படுத்துங்கள் என்று வேண்டினேன். அந்த நேரம்வரை அவர்களுக்கு வியாதியைப் பற்றிய தெளிவான கருத்தே உண்டாகவில்லை.

26-10-1987 அன்று இரவு என் பையனின் தாத்தா அவனுடைய கனவில் வந்து அவனுக்கு உடம்பு நலமாகி விட்டதாகக் கூறினார். உண்மையில் என் மகன் உடல் நிலை படுமோசமாக இருந்தது. அடுத்தநாள் என் கனவில் ஒரு முதியவர் வந்து என் மகன் உடல் நலமாகி விட்டதாகத் தெரிவித்தார். ஆனால் உண்மையில் அவன் உடல்நிலையில் முன்னேற்றமே இல்லை. நாட்படநாட்பட அவன் பலவீனப்பட்டு மேலும் மோசமாகியே வந்தான். அடுத்தநாள் இரவு என் கனவில் பகவான் திரு.வெங்கைய ஸ்வாமிகள் பிரசன்னமானார். அவர், ''சிறுவன் உடல் தேறிவிட்டான். அவனை ஆஸ்பத்திரியில் வைத்திருக்க வேண்டாம். உடனே அவனை வீட்டிற்கு எடுத்துச் சென்றுவிடுங்கள். நான் பென்னபட்வால் (ஸ்வாமிகள் தங்கிப் பல ஆண்டுகள் தவம் செய்த இடம். நான் இருந்த இடத்திற்கு அருகில் உள்ள கிராமம்) கிராமத்தில் உள்ளேன். பையனை அங்கே கொண்டுவாருங்கள்'' என்றார். நான் தாச்சூரில் பத்து ஆண்டுகள் முன்பு பார்த்தது போலவே ஸ்வாமிகள் என் கனவில் காட்சி அளித்தார்.

அடுத்தநாள் காலை எல்லா டாக்டர்களும் கூடி இந்த நோயைப் பற்றி விவாதித்தனர். புதிய சோதனைகளின்படி உடல் ஆரோக்யம் அவனுக்குச் சரியாக இருப்பதாக முடிவு செய்து அவனை ஆஸ்பத்திரியிலிருந்து விடுவித்தனர். அன்று முதல்

பையன் சரியாகவே இருக்கின்றான். ஸ்வாமிகளின் உத்தரவுபடி பென்னபட்வால் சென்றோம். டிசம்பர் 1987 - ஜனவரி 1988 போது சென்னையில் மருத்துவ பரிசோதனைக்கு வந்திருந் தோம். எந்தவிதமான புகாரும் கிடையாது. 1989 மார்ச் மாதம் அவன் பள்ளி இறுதி தேர்வு எழுதித் தேறி விட்டான்.

நான் தொழில்ரீதியாக ஆங்கில மருந்து விற்கும் பார்மஸி நடத்துபவன். எனவே இந்தத் துன்பமான நிலையில் என் முழு கவனம் டாக்டர்மீதுதான் இருந்தது. கடவுள், ஸ்ரீவெங்கைய ஸ்வாமிகள் ஆகியோரைப் பற்றி நினைக்கவே இல்லை. ஆனால் கருணைமிகு ஸ்வாமிகள் தாச்சூரில் சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு நான் செய்த சிறிய தொண்டுகளுக்காக உதவி செய்வது போல எனக்கு உதவியுள்ளார். ''நீங்கள் என்னை விட்டுவிட்டாலும் நான் உங்களை விடமாட்டேன்'' என்று உரைப்பார் ஸ்வாமி. மஹாசமாதி அடைந்த பிறகும் அவர் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார். தான் சொன்னபடி நடந்து வருகின்றார். எனவே ஸ்வாமிகளால் தீர்க்கப்படவேண்டிய பிரச்சனைகள் இல்லாவிட்டாலும் சகோதர சகோதரிகள் யாவரும் கொலகமூடியிலுள்ள அவரது துனியையும், சமாதி யையும் வழிபட வேண்டும் என்பது எனது தாழ்மையான வேண்டுகோள். அது சுயநலமற்ற இறைபணியாகும். ஸ்வாமி களின் பெயரில் காகபலிக்கு மிகுதியான அன்னம் இடுங்கள். ஸ்வாமி களை எல்லாப் பிராணிகளிலும் கண்டு மரியாதையுடன் நடந்து கொள்வோம். அது ஸ்வாமிகள் நம்மை எப்போதும் காப்பாற்ற வழி அமைக்கும்.

ஸ்வாமிகள் சத்தியத்தையும் தர்மத்தையும் பின்பற்றுவதில் தவறவே கூடாது என்று கூறியுள்ளார். ஸ்வாமிகளிடம் வேண்டிக் கொண்ட நேர்த்திக் கடன்களைத் தள்ளிப் போடாமல் தக்க காலத்தில் பூர்த்தி செய்துவிட வேண்டும். நாம் வாக்கைக் காப்பாற்றாவிடில் நிச்சயம் சங்கடங்களைச் சந்திக்க வேண்டி யிருக்கும். அதற்கு உடுமுல ஸ்வாமி ரெட்டியின் உதாரணம் உள்ளது. 1987-ஆம் ஆண்டில் என் மகன் உடுமுல சிவாரெட்டி



103 டிகிரி காய்ச்சலாலும் வலிப்பு நோயாலும் தாக்கப்பட்டான். அவனுக்கு வயது 22 தான். அவன் வாயிலிருந்து உமிழ்நீர் வெளியேறிக்கொண்டிருந்தது. பசியே கிடையாது. அவர் விழிகள் மேல் நோக்கியே இருந்தன. அவர் பொருளற்ற வார்த்தைகளைப் பிதற்றிக் கொண்டிருந்தார். ஆங்கில வைத்திய சிகிச்சைக்காக ஆறாயிரம் ரூபாய்கள் செலவழித்தும் வீணாயிற்று. என் நண்பரின் அறிவுரைப்படி, கடைசி முயற்சியாக கொலகமூடி வந்து என் மகன் சரியாகிவிட்டால் 116 ரூபாய்கள் செலுத்துவதாக ஸ்வாமியிடம் பிரார்த்தனை செய்து கொண்டேன். மூன்று நாட்களில் அவன் உடல்நிலை முழுமையாகத் தேறிவிட்டது.

கொலகமூடி சென்று பிரார்த்தனையைச் செலுத்த நாள் குறித்திருந்தேன். ஆனால் துரதிருஷ்டவசமாக என்னால் செல்ல முடியவில்லை; அன்று ஹைதராபாத் போகவேண்டிய அவசியம் உண்டாகிவிட்டது. ஸ்வாமிகளுக்குக் கொடுத்த வாக்கைவிட என் சொந்த வேலைக்கு முக்கியத்துவம் அளித்தேன். அன்றி லிருந்து என் மகனுக்கு மறுபடியும் உடல் நலம் சரியில்லாமல் ஆகிவிட்டது. வாக்குத் தவறிய என் அசிரத்தையால் தான் அவ்வாறு ஆகிவிட்டது என எனக்குத் தோன்றியது உடனே என் மகனுடன் கொலகமூடி சென்றேன். கொலகமூடியிலிருந்து பத்து கிலோமீட்டர் தொலைவிலுள்ள நெல்லூர் வந்தபோது அவன் உடல் நிலை மோசமாகியது. இரண்டு நாட்கள் நர்சிங்ஹோமில் அவனுக்கு சிகிச்சை கொடுக்கப்பட்டது. ஆனால் உடல்நிலை மேலும் மோசமாகியது. அதனால், அவனுடைய மோசமான உடல்நிலையிலும் அவனை கொலகமூடிக்கு அழைத்துசெல்ல முடிவு எடுத்தேன். ஒரு மகத்தான ஆச்சரியம் மறுபடியும் நிகழ்ந்தது. அந்த புனித மண்ணில் எங்கள் கால்கள் பட்ட மாத்திரத்திலேயே மாயமாக அவன் கஷ்டங்கள் யாவும் மறைந்தன. ஸ்வாமிகள் என் வாக்கை நான் காப்பாற்ற வேண்டும் என்று அறிவுறுத்துகிறார் என்று புரிந்து கொண்டு என்னை மன்னித்துவிடுமாறு வேண்டிக் கொண்டேன்.

**தன் அநுபவம் உரைப்பவர் : பூசலா ஜெயம்மாள் - ஆத்மாகூர் - நெல்லூர் மாவட்டம்**

1985-ஆம் ஆண்டில் எனக்கு அப்பெண்டிசீடீஸ் அறுவை சிகிச்சை நடந்தது. 1986-ஆம் ஆண்டில் கடுமையான வயிற்று வலியால் கடினமான அறுவை சிகிச்சை என் வயிற்றில் நடத்தவேண்டியிருந்தது. இரண்டு மாதங்கள் கழித்து மறுபடியும் வயிற்றுவலி வர வயிற்றின் பக்கத்தில் பெரிய பெரிய கொப்புளங்கள் இருப்பதை உணர முடிந்தது. தாங்கவே முடியாத வலி உண்டாகியது மருந்துகளால் நிவாரணம் கிடைக்கவில்லை. மூன்றாவது முறை அறுவைச் சிகிச்சை செய்வது ஆபத்தானது என டாக்டர்கள் கூறினர். நான் ஸ்வாமிகளின் கமலப் பாதங்களில் சரணடைந்தேன். மெதுவாக என் வலி குறைந்தது. நம் ஸ்வாமிகளுக்கு நான் 108 முறை பிரதக்ஷிணங்கள் செய்ய முடிந்தது. நான் நாற்பது நாட்கள் கொலகமூடியில் தங்கினேன். ஒருநாள் நான் ஸ்வாமிகளின் சீடர்களில் ஒருவரான கரி ராமஸ்வாமியிடம் என் நிலையை விளக்கினேன். இருபத்து ஒன்பதாவது நாள் ராமசாமியின் கனவில் ஸ்வாமிகள் வந்து என் வயிற்றில் அறுவைச் சிகிச்சை செய்து கொப்புளங்களை அழுத்தி விட்டார். அடுத்த நான்கு நாட்களில் கொப்புளங்கள் எல்லாம் மறைந்துவிட்டன. இன்றுவரை எனக்கு நல்ல ஆரோக்கியமே உள்ளது.

**தன் அநுபவம் கூறுபவர் : S.K. மஸ்தான்** - *16 வயது - 10-ஆம்* வகுப்பு மாணவர் - காட்டுபாடிபள்ளி - சைதாபுரம் மண்டல் - நெல்லூர் மாவட்டம்

1987-ம் ஆண்டு அக்டோபர் மாதம் எனக்குக் காய்ச்சல், தலைவலி, தொண்டையிலிருந்து மார்பு வரை பயங்கர வலி ஆகியவற்றால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தேன். என்னால் உட்காரவும் முடியவில்லை. படுத்துக் கொள்ளவும் முடிய வில்லை. மோசமான வாந்தி எடுப்பால் என் வயிற்றில் ஒரு பருக்கை சோறு கூட தங்கவில்லை. இவற்றின் விளைவாக நான் எலும்புக் கூடாக மெலிந்து விட்டேன். நெல்லூரில் இரண்டு



மாதங்கள் ஆங்கில வைத்தியம் உட்பட எல்லா விதமான சிகிச்சை முறைகளும் செய்துபார்த்தோம். எல்லாம் வீணாயின. ஒரு நாள் எங்கள் கிராமத்தில் வாழ்ந்த ஒரு வயதான மூதாட்டியார் நல் ஆரோக்கியம் வேண்டி பகவான் திரு. வெங்கைய ஸ்வாமிகளைப் பிரார்த்திக்குமாறு அறிவுரை நல்கினார். எங்களிடம் வெங்கைய ஸ்வாமிகளின் புகைப்படம் இல்லை. எனவே என் தாயார் ஸ்வாமிகளை மனத்தில் இருத்தி ஊதுபத்தி கொளுத்திவைத்து என் உடல்நிலை சரியானால் கொலகமூடிக்கு ஸ்வாமிகள் தரிசனத்திற்காக என்னை அழைத்து வருவதாகப் பிரார்த்தித்துக் கொண்டார். என்ன ஆச்சரியம்! ஐந்து நிமிடங்களில் என் வலிகள் மறைந்தன. நான் சாதாரணமாகச் சாப்பிட முடிந்தது.

எனவே எங்கள் பிரார்த்தனைப்படி, அடுத்த நாள் காலை கொலகமூடிக்குப் புறப்பட்டோம். பேருந்து செல்லும் பாதையை அடைய நாங்கள் ஐந்து கிலோ மீட்டர் நடக்க வேண்டும். நடக்க முடியாதபடி பலவீனமாக இருந்ததால் என் கைகளைத் தாங்கியபடி என் தாயும் தந்தையும் மெதுவாக கிராமத்தின் எல்லைப்புறத்திற்கு என்னை அழைத்து வந்தனர். எங்கள் பிரார்த்தனையைப் பூர்த்தி செய்ய கொலகமூடிக்கு எங்களை அழைத்துச் செல்லுமாறு சுவாமிகளை பிரார்த்தித்துக் கொண்டோம். எங்கிருந்து அத்தனை பலம் எனக்கு வந்ததோ தெரியாது. ஐந்து கிலோ மீட்டர் தொலைவையும் நான் பிறரது உதவியின்றியே நடந்தேன். பின் கொலகமூடியை நாங்கள் அடைந்தபோது மாலை நான்கு மணி ஆகிவிட்டது. அந்த நாள் முதல் நான் ஸ்வாமிகளிடம் பிரார்த்திக்கவும் அவரை வழிபடவும் எனக்கு ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் அவருடைய நாமத்தை ஜபிக்கவும் ஆரம்பித்தேன். ஓய்வு நேரங்களில் நான் விளையாட்டையும், நண்பர்களையும் தவிர்த்துத் தனிமையை நாடி அவருடைய மகிமையைக் குறித்த பாடல்களை நானே உருவாக்கிப் பாடினேன். அடுத்த ஆறு மாதங்களில் மெல்ல மெல்ல சோம்பல் என்னை ஆட்கொள்ள, நான் என் நண்பர்களுடன் காலம் கழிக்கத் துவங்கினேன். ஒரு

நாள் ஸ்வாமிகள் என் கனவில் தோன்றி, ''என்ன? எல்லாம் உன் தேவை தீரும் வரைக்குத்தானா?'' என்று கேட்டார். உடனே நான் விழித்துக் கொண்டு என் அறியாமையிலிருந்தும் எழுந்து சிரத்தையாக சாதனை செய்ய ஆரம்பித்தேன்.

கிராமிய அரசியலால் கடந்த நான்கு ஆண்டுகளாக நின்று போயிருந்த ஒரு முஸ்லிம் மஹானின் கொடி ஊர்வலத்தை இந்த ஆண்டு நடத்த விரும்பினேன். அதற்காக நன்கொடைகள்கூட வசூலித்திருந்தேன். பலர் கலவரம் ஏற்படக்கூடும் என அஞ்சி அந்த விஷயத்தில் என்னை ஈடுபட வேண்டாம் எனத் தடுத்தனர். எனவே அந்த விஷயத்தில் முடிவு எடுக்க ஸ்வாமிகளிடம் பிரார்த்தனை செய்தேன். கருணைமிகு ஸ்வாமிகள் என் கனவில், ''என்ன? என் சக்தி உனக்குத் தெரியாதா? ஏன் அஞ்சுகின்றாய்? மேலே காரியங்களைக் கவனி. நான் இருக்கின்றேன்'' என்று அருளினார். நான் தேவையான செயல்களை மேலே செய்தேன். எல்லாம் நல்லபடியாக அமைதிகரமாக நடந்தன. அந்தப் பகுதியிலிருந்த மோசமான குடிகாரர்கள் கூட அன்று குடிக்காமல் இருந்தனர் எனப்பின்னால் தெரிந்தது.

அடுத்த நாள் பகல் 1 மணி இருக்கும். நான் உறங்கிக் கொண்டிருந்தேன். வயதான, அசாதாரணமான நீண்ட பாதங்கள் உடைய மெலிந்த மனிதர் ஒருவர் என் வீடு வந்தார். என் தாயார் அளித்த உணவையும், குடிநீரையும் வேண்டாமென்றார். ஆனால் ஐம்பது காசுகளும், கொஞ்சம் புகையிலையும் மட்டும் கேட்டுவாங்கிக் கொண்டு திரும்பினார். என் தாயாரும் மற்றும் பக்கத்திலிருந்த பெண்களும் அவரைப் பிடித்துக் கொண்டு தெருவுக்கு அழைத்துச் சென்றனர். அவருடைய கைகளை விட்டுவிட்டு அவர்கள் திரும்பியபோது அவர் மறைந்து விட்டார். நான் எழுந்த உடன் கிராமம் முழுதும் அவரைத் தேடிப்பார்த்தேன். அவரை யாராலும் பார்க்க இயலவில்லை. இவ்வாறு அவர் என் பணிகளையும் கிராமத்தையும் ஆசீர்வதித்தார்.

ஒரு நாள் இரவு கூரை போட்ட என் வீட்டில் சத்சங்கம் நடந்து கொண்டிருந்தது. பலத்த மழையால் தண்ணீர் ஒழுகியது.



எனவே எல்லா பக்தர்களும் இங்கும் அங்கும் அமர்ந்திருந்தனர். நான் ஸ்வாமிகளை நினைத்து, ''ஓ கருணைமிகு ஸ்வாமிகளே! நீங்கள் எங்களுடன் இருப்பது உண்மையானால் இனிவீடு ஒழுகாமல் இருக்கட்டும்'' என்று வேண்டினேன். அங்கு அமர்ந்திருந்த உறுப்பினர் திகைப்பு அடையும் வகையில் அந்த கணத்திலிருந்து வெளியே மழை கொட்டிக் கொண்டிருந்தாலும் ஒழுகுவது நின்றுவிட்டது. சாதாரணமாகக் குடிசை வீடுகளில் மழை வெளியே விட்டு விட்டாலும் உள்ளே சிறிது நேரம் நீர் சொட்டிக் கொண்டிருக்கும் என்பது கவனிக்கத் தக்கது.

ஒரு நாள் ஸ்வாமிகளின் வாழ்க்கை வரலாற்றை என் வீட்டு வராந்தாவில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தேன். எங்களுடைய ஊர் காளைமாடு ஒன்று பசு ஒன்றை துரத்தியவாறு ஓடியவண்ணம் என் வீட்டைக் கடந்து சென்றது. நான் ஸ்வாமிகளை நோக்கி பிரார்த்தித்து, ''ஸ்வாமிகளே! நீங்கள் எல்லா உயிர்களிலும் இருப்பது உண்மையானால் இந்த எருது அரை மணி நேரத்தில் திரும்பிவந்து இந்த இடத்தில் வந்து நிற்கவேண்டும்'' என்று வேண்டினேன். எனக்கே வியப்பு உண்டாகும்படி அடுத்த சில நிமிடங்களில் அந்த எருது பசுவை விரட்டுவதை நிறுத்தி நேராக என் வீட்டிற்கு வந்து வாயிலில் என் முன்னால் நின்றது. நான் கொடுத்த புல்லைத் தின்று தண்ணீரையும் பருகி அது சென்றுவிட்டது. இப்படி மறுபடியும் ஸ்வாமிகள் தான் எல்லாப் பிராணிகளிலும் இருப்பதையும், என்னுள் உறைவதையும் நிரூபித்துக் காட்டினார்கள்.

**ஓம் ஸ்வாமியே நமஹ**

## ஸ்வாமிகளின் அருள் மொழிகள்

1. பசித்தவர்க்கு உணவு அளியுங்கள். ஏப்பம் விடுபவர்க்கு அல்ல.
2. நம்பிக்கையுடன் வாருங்கள். நீங்கள் என்ன நினைத்தீர்களோ அது நிறைவேறும்.

3. எல்லா உயிர்களிலும் வெங்கையா உள்ளார் என்பதை நீங்கள் அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள்.

4. நீங்கள் என்னை விட்டுவிட்டாலும் நான் உங்களை விட மாட்டேன்.

5. மைசூர் மஹாராஜாவின் தரிசனத்தால் உனக்கு என்ன கிடைக்கப் போகின்றது? நீங்கள் என்ன விதைக்கின்றீர் களோ அதற்கான பலன்தான் உங்களுக்குக் கிடைக்கும்.

6. ஒருவருடைய நம்பிக்கைக்குத் தக்கவாறு நான் உதவு கின்றேன்.

7. ஆயிரம் ஆடுகள் உள்ள மந்தையிலும் என் ஆட்டை நான் கண்டுபிடித்து விடுவேன்.

8. கடவுளை உணர யாவரையும் ஒரே மாதிரி நேசியுங்கள்.

9. என் பெயரில் ஒரு கவளம் உணவு இடுபவர்கள் மற்றும் கொண்டு வருபவர்கள் ஆகியோரின் நல்வாழ்வுக்கு நான் பொறுப்பு வகிக்கிறேன்.

10. ஒரு பக்தர் மந்திர உபதேசம் கேட்டார். அதற்கு ஸ்வாமிகள், ''மந்திரமும் இல்லை. தந்திரமும் இல்லை சிந்தனையுடன் செயல்படு'' என்றார்.

11. ஒரு துறவி தர்மவழியில் செல்வதில் பெரிய விஷயம் ஒன்றும் கிடையாது. ஆனால் ஒரு கிரகஸ்தன் தர்ம வழியில் நடப்பது மிகப் பெரிய விஷயமாகும்.

12. பணத்தை வட்டிக்கு விடும்போது கூட நாம் தர்ம வழியில் தான் நடக்க வேண்டும்.

13. நாம் பெருந்தன்மை, எளிமை, சத்குரு சேவை ஆகிய வற்றைச் சாதிக்க வேண்டும் (அடைய வேண்டும்).

14. நாலணா திருடினால் பத்து ரூபாய் நஷ்டம் உண்டாகும்.

15. லாபத்தில பங்கு கேட்பவர்க்குப் பாவத்திலும் பங்கு உண்டு.

16. பிறரைப் போகச் சொல்வதைவிட நாம் போவதே மேல்.



# ஸ்வாமி நம்மிடம் இருந்து எதிர்பார்ப்பது என்ன?

வெளி அலங்காரத்தையும் விக்ரக வழிபாட்டையும் தானா ஸ்வாமி நம்மிடம் எதிர்பார்க்கிறார்? தமது குழந்தைகள் முடிவில்லாத துயரத்தால் துன்புறும்போது மனிதப் பெற்றோர் களுக்குக் கூட உணவு இறங்காது. அன்பும் வைராக்கியமுமே உருவான ஸ்வாமி நமது வெளிப்படையான தொண்டுகளால் மட்டுமே திருப்தியும் சாந்தியும் அடைவாரா? இதனைக் குறித்து ஆழ்ந்து சிந்தித்து ஸ்வாமிக்குத் (கடவுளுக்கு) தொண்டு புரியுங்கள்.

எல்லா உயிர்களிலும் நான் உறைகின்றேன் என்று பகிரங்கமாக அவர் உரைத்தார். அவருடைய தெய்வீகமான லீலைகளினால் அவர் மனிதத்தன்மையையும் நம்மைச் சுற்றி யுள்ள உயிர்களிடம் அன்பையும் வளருங்கள் என்று ஞாபகப் படுத்துகிறார். நாம் நாய்களுக்கு அன்பாக உணவூட்டுகிறோம் ஆனால் நம் வீட்டு மருமகளை அன்பாக நடத்துவதில்லை. நாம் காக்கைக்கு உணவு இடுகின்றோம். ஆனால் கோப்புகள் நகர்வதற்கு லஞ்சம் வாங்காமல் இருப்பதில்லை. சட்டத்திற்குப் புறம்பான வழியில் லஞ்சம் எதிர்பார்த்து அந்தக் கோப்புகளை தக்க வைப்பதன் மூலம் நாம் எத்தனை சகமனிதர்களை சித்திரவதை செய்கின்றோம் என்பதை உணர்கின்றோமா?

பரிட்சைகளில் காப்பி அடிக்கின்றோம். காப்பி அடிப்பதை ஊக்குவிக்கின்றோம். தீவிர கண்காணிப்பாளர்களுக்கு உதை கொடுக்கின்றோம். கடுமையாக உழைத்து புத்தியை கூர்மை யாக்கிய நல்ல மாணவன் வாழ்க்கையில் பின்னுக்குத் தள்ளப் பட்டு வேலை இல்லாதவனாகின்றான் என்பது தெரியுமா? பலருக்கு ரகசியமாக துன்பங்கள் உண்டாக்கி கொலகமூடியில் ஆடம்பரமான செயல்களையும் பகட்டான உற்சவங்களையும்

ஏற்பாடு செய்துவிட்டால் ஸ்வாமிகளுக்கு மகிழ்ச்சி ஏற்படுமா? துன்பத்தில் உழலும்போது ஸ்வாமிகளிடம் பிரார்த்தனைகளைச் செய்துவிட்டு அந்தப் பிரார்த்தனைகளை நிறைவேற்றிய பிறகு அவரை மறக்கலாமா? வேறு பிரச்னைகள் எழுந்தால் ஒழிய நாம் ஸ்வாமிகளை நினைப்பது இல்லை.

இதுபோன்ற இதயமில்லாத காட்சிகளைக் காணத்தான் ஸ்வாமிகள் அமர்ந்து கொண்டிருக்கின்றாரா? அவர் அன்பே வடிவானவர் என்பதால் மனிதநேயத்தை எல்லாருடைய இதயங்களிலும் ஏற்படுத்தத்தான் குழந்தைகளான நம்மைத் தம்மிடம் இழுத்துக் கொண்டு எவ்வளவு முறையானாலும் நமது கஷ்டங்களில் உதவுகிறார். சகமனிதர்களிடமும் பிராணி களிடமும் நடந்துகொள்ளும் முறையில் எந்தவித மாறுதலும் ஏற்படுத்திக் கொள்ளாமல் பிடிவாதமாக இருந்தோமாகில், ஒரு நிலையில் அவர் நம்மை நம் விதியை அனுபவிக்கும்படி விட்டுவிடுவார். அன்று நம்மைக் காப்பாற்ற யாருமே இருக்கமாட்டார்கள். தான் வாழ்நாள் முழுதும் உபதேசித்து நடந்துகாட்டிய தர்மத்தைப் பின்பற்றுவதையே அவர் குரு தக்ஷிணையாக நம்மிடம் எதிர்ப்பார்க்கின்றார். எல்லா உயிர்களிலும் ஸ்வாமிகளைக் காண நாம் பயின்று நாம் செயலில் அவைகளிடம் கருணைகாட்டி வாழ வேண்டும். உண்மையாக நடந்தபடி இறைவன் புகழ்பாடி வாழுவோம்.

★ ★ ★

இந்த புத்தகங்களை உங்கள் நண்பர்களுக்கு வழங்கி அவர்களுடைய பிரச்னைகள் ஸ்வாமிகளின் அருளால் தீர உதவி புரியுங்கள்.



# ஸ்ரீ ஸ்வாமி க்ருபா பப்ளிகேஷன்ஸ்
## வெளியீடுகள்

| | நூலின் தலைப்பு | | விலை ரூ. பை |
|---|---|---|---|
| 1. | அவதூத லீலா | (தெலுங்கு) | 40 00 |
| 2. | அவதூத லீலா | (ஆங்கிலம்) | 30 00 |
| 3. | பகவான் ஸ்ரீ வெங்கைய ஸ்வாமி | (ஆங்கிலம்) | 3 00 |
| 4. | பகவான் ஸ்ரீ வெங்கைய ஸ்வாமி | (தமிழ்) | 5 00 |
| 5. | ஸ்ரீ ஸ்வாமி சன்னிதி | (தெலுங்கு) | 15 00 |
| 6. | அவதூத போதாம்ருதம் | (தெலுங்கு) | 15 00 |
| 7. | ஸ்ரீ ஸ்வாமி க்ருபா | | 1 50 |
| 8. | திவ்ய லீலலு | | 1 00 |
| 9. | மவுன போதா | | 1 00 |

VPP தபால் மூலம் பெறலாம்.
தபால் செலவு தனி

SRI SWAMY KRUPA PUBLICATIONS
GOLAGAMUDI - 524321
NELLORE DISTRICT
ANDHRA PRADESH, INDIA